ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கஉ	மெய்கண்டான் யாண்டு-எகக மார்கழித் திங்கள் 1933ஞு டிசம்பர்மீ—1934 ஜனவரிமீ	பரல் ரு

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே.

பதவுரை:—

என்னில்—என்னைப் பார்க்கிலும்

எனக்கு யாரும் இனியார் இல்லை—எனக்கு இனியராவார் எவரும் (மக்களுக்குள்) இல்லை

என்னிலும்—ஆனால் என்னைப் பார்க்கிலும்

இனியான் ஒருவன் உளன்—எனக்கு இனியனாவான் ஒருவன் இருக்கின்றான்

என் உள்ளே (உம்)—(அவன் யார் என்னில்) எனது உடலினுள்ளே தங்கியும்

புறம்போந்து (உம்)—எனது உடலுக்குப் புறத்திலே சென்றும்

புக்கு (உம்)—புறத்திலிருந்து உடலினுள்ளே வந்தும்

உயிர்ப்பாய்—(எனது உடலிலுள்ள உயிர்க்கு ஆதாரமாய் இயங்குகின்ற) மூச்சுப்போல்

என் உள்ளே நிற்கும்—எனது உயிருக்கு ஆதாரமாய் அதனோடு ஒன்றாகிக் கலந்தும் வேறாகி நின்று அறிவித்தும் உடனாகி நின்று அறிந்தும்

எனது உள்ளத்தினுள்ளே பேரொளிப் பொருளாய், அதனை நிலை பெற்று நிற்கின்ற

இன்னம்பர்ஈசன்—திரு இன்னம்பர் என்ற தலத்தில் திருக்கோவில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் சிவபெருமான்.

விளக்கவுரை:—

இனியார் இல்லை என்னினும் இனியான் ஒருவன் உளன்—இனிமையை உடையவர் இனியார் ஆவார். எது உயிரினுக்கு நிலையான நலம் தருமோ அது இனிமையாகும். பெற்றூர் உற்ருர் உறவினர் முதலிய மக்கள் பலராயிருத்தலின் 'இனியார்' என்று பன்மையிலும் முழுமுதற் கடவுளான சிவபெருமான் ஒருவரா யிருத்தலின் 'இனியான்' என்று ஒருமையிலும் கூறினர். பகுத்தறிவுடைய மக்களெல்லாரும் உலக வாழ்வின் இன்ப நலத்தையே வேட்கை (இச்சை) யாலே நாடி அறிவினலேதேடி செயலாலே கூடுகிறவர்களாஞலும் உலக நெறியில் அவர்களுடைய வேட்கை அறிவு செயல்கள் திரோத மலத்தால் மறைப்புண் டிருத்தலினுலும் வீட்டு நெறியில் இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் நிரம்பும் காலம்வரை அருள் விளக்கம் குறைவா யிருத்தலாலும் தங்களுக்கு உண்மையான இன்ப நலம் இன்னது என்று அறியமாட்டார்கள். ஆதலின் அவர்கள் வேட்கையோ டொன்ருகிக் கலந்து வேட்கையை விளக்கி வேட்பித்து அறிவுக்கு வேருய் நின்று அறிவில் விளக்கி அறிவித்தும் விடயப் பொருளோடு உடனுய் நின்று அவர்களுக்கு விடயங்களை விளக்கி அறிந்தும் வருகின்ற முற்றறிவினனுய்ச் சிவபெருமான் அவர்களுக்கு உண்மை நலத்தை நாடி அறிந்து என்றும் பொதுவாய் எல்லா மக்களுக்கும் கூட்டுவிப்பான் என்ற உண்மையைத் தன் மேலேற்றி அடிகள் கூறினர். "எனக்கு வேண்டத்தக்க நலத்தினை நீயே நன்கு அறிவாய்" "நீயே அதனை எனக்குச் செய்தருள்வாய்' என்று ஒருவர் தன் நலத்தைப் பெருமானிடம் ஒப்புவிப்பாராஞல் அவன் அவரது உண்மை நலத்தை நன்கு அறிந்து முன்னின்று செய்விப்பன் என்பது கருத்து.

என் உள்ளே (உம்) புறம்போந்து (உம்) புக்கு (உம்) உயிர்ப்பாய்—தொக்கு நின்ற உம்மைகளை மூன்றிடங்களிலும் விரித்து உரைக்க. என் உள்ளே—எனது உடலின் உள்ளே. உயிர்ப்பாய் என்பதிலுள்ள ஆய் உவமப் பொருளில் வந்தது. சிவஞானபோதம் 7-ம் சூத்திரம் 'அருவுருவ மன்ருகும்' என்ற வெண்பாவில் அருஉரு ஆய் என்பதில் ஆய் உவமப்பொருளில் வந்தது என சிவஞான சுவாமிகள் உரை கூறி யருளியதும் காண்க. 'ஆள்வாரிலிமாடாவேனே' என்ற திரு

வாசகச் சொற்றொடரிலும் ஆய் உவமப்பொருளில் வந்தது காண்க. உயிர்ப்பாய் என்ற உண்மையால் மூச்சு உள்ளே வாங்குதலும் புறத்திலும் விடுதலும் எவ்வாறு உடலில் உயிர் நிற்பதற்கு ஆகாரமா யிருக்கிறதோ அவ்வாறு சிவபெருமான் உயிர்களோடு ஒன்றாய் நிற்றலும் வேறாய் நிற்றலும் உடனாய் நிற்றலும் உயிர்கள் வேட்கை அறிவு செயல்களை நிகழ்த்தி இயங்குதற்கு ஆதாரமாயுள்ளன என்று கூறப்பட்டது. உயிர்ப்பாய் என்பதற்கு உயிர்ப்பாக என்று பொருள் கொண்டு சிவபெருமான் பிராணவாயுவை இயக்குகிற சத்தியாக நின்று மூச்சை உள்ளே இழுத்தும் வெளியே விடுத்தும் உள்ளே தங்கியும் உடலில் அதனுடன் சேர்ந்திருக்கின்றான் என்று பொருள் கூறினும் பொருந்தும். 'உயிர்ப்புளே வருதியேனும்' என்று திருநாவுக்கரசு அடிகள் தனித்திருநேரிசைப் பதிகம் 7-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. ஆனாற் பதவுரையிற் கூறப்பட்ட பொருள், இப்பொருளினும் சிறப்புடையது.

என்னுள்ளே நிற்கும்—என்னுள்ளே—எனது உயிரினுள்ளே, நிற்கும்—எப்பொழுதும் நீங்காம லிருக்கும்.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

ஆவூர்மூலங்கிழார் பாக்களின் அருங்கருத்துக்கள்

---

1. செங்கோல் மன்னனது நாடு துறக்க வுலகினுஞ் சிறந்தது.

2. வேந்தே! நீ காட்சிக் கெளியனாயும் கடுஞ்சொல் அல்லனாயும் இருப்பாயாக.

3. பலநாள் உடல் உலரக் காத்திருந்து பெருஞ் செல்வரிடத்துப் பெற்ற யானை முதலிய பரிசில்களைக் காட்டிலும் ஒருவன் அன்புடனளிக்கும் உணவைக் காலையிற் பனம்பட்டையில் உண்ணல் மிகச் சிறந்தது.

4. பெருமானே! கையிலுள்ளதைக் கொடுத்தலும், இல்லாததை இல்லையென்றலும் உலகியற்கை; அங்ஙனமின்றிப் பரிசிலரை அலைக்கழித்தல் உனக்கு நன்றன்று.

சமயமும் தத்துவமும் :
Religion & Philosophy

மும்மையாலுலகாண்ட மூர்த்தி

(முன் கடுஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

(வித்வான் T. P. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் M.A., B.L.,)

கஞ மெய்யானமை:—ஆனுல் மூர்த்திநாயனுர், மெய்யுணர்வு கைவரப்பெற்ற அறவோராய் வாழ்ந்தபின்னரே அரசராய் உலகை ஆண்டார் ஆதலின் ப்ளேடோவின் கொள்கையை மெய்ப்படுத் தற்குத் தக்க எடுத்துக்காட்டாக விளங்குகிருர்.

தலைகீழான தலைமுறை:—அம்மட்டோ? மூர்த்திநாயனுரைச் சேக்கிழார் பெருமான் செட்டிக்குடியில் பிறப்பிக்கின்ருர். இவர் பொதுமக்களில் ஒருவராய் வாழ்ந்து சிவனை வழிபடும் நோன்பு நோற்று அறவோராய்ப் பின் அரசராகின்ருர். செட்டிமகனுர் தொண்டுநிலை பூண்டு அந்தணராய்ப் பின் அவ்வருள்வழியே அரச ராகின்ருர். குடிப்பிறப்பை இவ்வாறு சேக்கிழார் தலைகீழாகத் திருப்புவதன் நுட்பத்தை உற்று நோக்குதல்வேண்டும். செட்டிக் குடியில் பிறந்தார் தொண்டராகின்ருர். அந்தணர் நிலையில் வாழ்ந்த பின் அரசராகின்ருர். நாற்குடி ஒழுக்கமும் முறை பிறழ்ந்தேனும் இவ்வாறு இவரிடம் ஒருங்குதிரண்டு விளங்குகின்றது. இறைவ னது தொண்டராய் உலகினரையும் நடமாடுங் கோயிலாகக் கொண்டு வழிபட்டனராதலின் உலகிற்கும் தொண்டராய் விளங் கினமையால் நாலாம் குடியின் ஒழுக்கமும் இவரிடம் உண்டு. செட்டிக்குடியிற் பிறத்தலின் மூன்ருங்குடி ஒழுக்கமும் உண்டு. அரசராய் ஆளுதலின் இரண்டாங்குடி ஒழுக்கமும் உண்டு. அனைத் துயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுதலால் அந்தணர் எனப் படுவோர் இவ்வறவோரே யாதலின் முதற்குடி ஒழுக்கமும் இவ ரிடம் உண்டு. இவ்வாறு எல்லாக்குடி ஒழுக்கமும் ஒருவனிடத்தே ஒருங்கு திரளுதல்வேண்டும் என்கிருர் சேக்கிழார். ஆதலின் இவர் ப்ளேடோவைவிட பலபடிகள் உயரச் சென்றுள்ளார்.

"ஒன்றே குலமும்":—குடிமுறையைத் தலைகீழாகத் திருப்புவதால் குடிப்பிறப்புக் கொள்கைகளைச் சேக்கிழார் முற்றும் ஒப்புக்கொண்டவரல்லர் என்பது வெள்ளிடை. பிறப்பாலேயே அரசனாதல்வேண்டும்; பிறப்பாலேயே அந்தணனாதல் வேண்டும். 'இக்குடி யுயர்ந்தது முதலாவது; இக்குடி தாழ்ந்தது நான்காவது' என்ற கொள்கையை மூர்த்திநாயனார் வாயிலாகச் சேக்கிழார் மறுக்கின்றார் எனலாம். நாற்பாற்குடியினரின் ஒழுக்கங்களும் மேற்கண்டபடி விளங்குமாயின் அவையனைத்தும் தலைசிறந்தனவே என்பதனையும் அவையனைத்தும் ஒருவனுடைய உயர்நிலைக்கு இன்றியமையாதன என்பதனையும் மூர்த்திநாயனார் வாழ்க்கை நன்கு வற்புறுத்துகின்றதல்லவா? இவ்வாறு கொண்டாலன்றோ "ஒன்றே குலமும் ஒன்றே தெய்வமும்" என்பது மெய்யாகும்.

அரசனும் அடிமையே:—அரச செல்வத்தில் அனைவர்க்கும் உரிமையுண்டு. ஆனால் அதற்குத் தகுதியாளரே அச்சுமையைத் தாங்குதல்வேண்டும். அரசன் இல்லையானால் நாடே இல்லையாம். ஆனால், அவன் பொதுமக்கள் நன்மையையே கருதி யாளுதல் வேண்டும். அரசசெல்வ மனைத்தும் பொதுமக்களின் செல்வமே யாகும். அரசன் ஒரு செயலாளனேயாம்.

'தாழுஞ் செயலின் றொருமன்னவன் தாங்க வேண்டும்
கூழுங் குடியு முதலாயின கொள்கைத் தேனும்
சூழும் படைமன் னவன்றோ ளிணைக்காவ லின்றி
வாழுந் தகைத் தன்றிந்த வையகம் என்று சொன்னார்.'

'பன்முறை யுயிர்கள் எல்லாம் பாலித்துஞாலங் காப்பான்
தன்னெடுங் குடைக்கீழ்த் தத்த நெறிகளிற் சரித்து வாழும்
மன்னரை யின்றிவைகும் மண்ணுல கெண்ணுங் கல்லை
இன்னுயி ரின்றி வாழும் யாக்கையை ஒக்கும் என்பார்.'

என அமைச்சர்கள் வாய்வைத்துச் சேக்கிழார் கூறுவது காண்க. இவ்வாறு வாழ்ந்தார் மூர்த்திநாயனார் என்பதே நோக்கு. சேக்கிழார் கண்ட அரசியனுட்பம் ஈது.

காசே கடவுள்:—அறவோர் அரசான வரலாறு மற்றோர் உயரிய உண்மையையும் வற்புறுத்துகின்றது. துறவென்றால் எல்லாவற்றையும் விட்டுவிட்டுக் காட்டுக்குள்ளே போய் ஒளிந்து கொள்வதெனப் பலர் கருதுகின்றனர். அக்கொள்கையை இப் புனைந்துரை வரலாற்றிற் சேக்கிழார் மறுத்துரை யாடுகின்றார்.

திருவையும் தாயாகக்கொண்டு வழிபடுகின்ற நாடு இந்த நாடு என்பதைப் பலர் மறந்துவிடுகின்றனர். தீயோர்கள் நம்முடைய அன்னையாம் திருவினை ஆட்டிப் படைக்கும்போது காடு சென்று ஒளிப்பதோ அறவழி? உலகத்தை ஆள்பவள் திருப் பிராட்டியாதலின் அவளுடைய வழிபாடு நமக்கு இன்றியமையாததாம். தமக்கெனத் திருவினைத் தேடித் துய்ப்பார் தாயைத் தழுவிய கொடியோர் ஆவர். உலக நன்மையின் பொருட்டுத் திருவினை வழிபடுவார் தாய் வழிபாடு செய்வோர் ஆவர். இவ்வகையிலே செல்வராய் வாழ்தல் ஒவ்வொருவருடைய கடமையே யாம். துறவென்பது அகத்துறவே யாகும். பொன்னையும் பொருளையும் தனக்கெனத் தேடாது உலகுக்கெனத் தேடுதலும் துறவேயாம். அதற்கேற்ப மூர்த்தி நாயனர் இறைவனுடைய அருள் வழியே நின்று கொடியோருடைய கையில் சிக்கிய திருப்பிராட்டியாரை விடுவித்துச் சிவப்பெருநெறியில் உலாப்போக வைத்துத் தாமே அரசராய் முன்னின்று தாய் வழிபாடு செய்தமை காண்க. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள், தாம் செல்வராயபொழுதும், பழையபடியே தொண்டு செய்து வயிற்றை வளர்த்து வருவார்களே யன்றி, நாயுருவிபோலப் பற்றுக்கோடையே தின்று தீர்ப்பதில்லை.

மடைமாற்றிப் பாய்ச்சுதல்:—ஐம்புலனும் ஆரத் துய்க்கும் அரச செல்வத்திலே ஐம்புலனையும் அடக்கும் துறவிகள் எப்படி வாழக்கூடும்? பொய்த் துறவுக் கொள்கைகள் பரவிய பின்னரே இத்தகைய கேள்வி எழுகின்றது. தூங்கி மகிழும் குளத்தின் பச்சிலைப் பரப்பின் நடுவிலே பச்சைக்கல் மேடையின் நடுவே மணி விளக்குப்போல அழகிய தாமரைப்பூவானது காட்சி தந்து, இறைவனது அழகிய உண்மை வடிவம் இதனூடே இன்பக் கூத்தாடுவதனையுங் காட்டி இன்பக் கடலில் கண்டோரை அழுத்தி விடுகின்றது.

> 'மரத்தை மறைத்தது மாமத யானை
> மரத்தின் மறைந்தது மாமத யானை
> பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
> பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்.'

யானையின் வடிவம் செதுக்கிய கட்டை யொன்றைக் கண்டு அதன் அழகினை உணராமல் கட்டை என்றே கொண்டு இடறி

விழுவார் பலர். அழகு வெள்ளம் பொங்கி வழியும் இறைவன் வடிவமாக உலகம் நம் எதிரே நிற்கிறது. இதனை உண்மையறிவின்பு வடிவாகக்கொண்டு வழிபடமாட்டாதார் கல்லென்று கதறியும் நஞ்சென்று எண்ணி உயிர் இழந்தும் வருந்துகின்றனர். இவை யனைத்தையும் இன்பமாகக் காணக் கூடுமானால் பின் நமக்கு வேண்டுவதுதான் என்ன? அவ்வாறு வழிபடுவான் ஐம்புலனாலும் ஆரத் துய்ப்பது ஆண்டவனது அழகுவடிவத்தே பொங்கி வழியும் இன்பத்தேனையே யாதலின், அங்கே ஐம்புலனை என் அடக்குதல் வேண்டும்? கடவுளைக் காணாது மாறிநின்று கல்லைக்கண்டு முட்டிக்கொள்வதையன்றோ அப்புலன்களின் பெருவஞ்சனை என்று பெரியோர்கள் பழித்தனர்.

"மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்"

என மணிவாசகப் பெருமானார் பாடுவது காண்க. கடவுட் காட்சி கைவரப் பெற்றால் புலன்கள் வேறு வழியில் இயங்குவதனை மடைமாற்றம் என்ற அழகிய சொற்றொடரால் விளக்குகின்றார் திருமூலர்.

'தானே புலனைந்துந் தன்வச மாயிடும்
தானே புலனைந்துந் தன்வசம் போயிடுந்
தானே புலனைந்துந் தன்னின் மடைமாறும்
தானே தனித்தெம் பிரான்றனைச் சந்தித்ததே'

இவ்வாறு மடைமாற்றுவதே வேண்டப்படுவது. ஐம்புலனையும் அடியோடு அடைத்துவிடுவது அறிவுடைய மக்கள் செயல் அன்று. இதுதான் வேண்டப்படுவதானால், கடவுள் நம்மைக் குருடாராகவும் செவிடாராகவும் படைத்திருப்பான்.

'அஞ்சு மடக்கடக் கென்ப ரறிவிலார்
அஞ்சு மடக்கும் அமரரும் அங்கில்லை
அஞ்சு மடக்கில் அசேனமாம் என்றிட்
டஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே'

எனத் திருமூலர் முழங்குவது காண்க. இதனாலல்லவா, ஐம்புல அறிவைப் பழியாது,

'ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயனென்னும்
மெய்யுணர் வெய்தாக் கடை'

என்று பாடி ஐம்புல வுணர்வால் சிறப்பின்பம் பெறுவது, மெய் யுணர்வு கைவந்தபோதுதான் என வற்புறுத்துகின்றார் தமிழ் மறைபாடிய திருவள்ளுவனார்.

பல்லைப் பிடுங்குதல்:—அழகிய தாமரைப்பூவைக் கண்டு அக மகிழும்போது கேடொன்றும் புகுவதில்லை. பின் அவ்வின்பம் தணிந்ததும், "நான்" என்ற முனைப்பெழவே அதனைப் பின்பற்றிச் சென்று உலகிற் கொரு முதலாய் நின்ற அப்பூவைத் தமதாக்க எண்ணிப் பறிக்கச் சென்று கொடிக்குள்ளே கால் சிக்கி இறக் கின்றார்கள். இக்கொள்ளைக் கூட்டத்தார் தமக்கென்றும் தம் பெண்டு பிள்ளைக்கென்றும் எழுகின்ற இந்த அவாப் பேய் நமது பிடர் பிடித்து உந்தாதிருக்குமானால், இப்புலன்கள் பல்லற்ற பாம்புபோல விளையாட்டுப் பொருளாக விளங்குகின்றன. புலன் கள் என்ற பாம்புகளின் பற்று என்ற பற்களைப் பிடுங்கிவிட வேண்டும். இவ்வாறு பல்லைப் பிடுங்குவதனையே திருமூலரும்,

'அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன
அஞ்சும்போய் மேய்ந்து தம்அஞ்சக மேபுகும்
அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்
எஞ்சா திறைவனை எய்தலும் ஆமே'

என்ற பாட்டில் கூறுவது காண்க. இதனையே புலனடக்கம் என் றும் புலவென்றி யென்றும் நம்மவர் வழங்கிவருகின்றனர்.

உயிர் ஓவியம்:—காசையே கடவுள் எனக்கொண்டு வழி பாடு செய்தாலும் தனக்கென வாழாப் பிறர்க்குரியாள னாகவே இருந்தும் அரசனென வாழ்ந்தாலும், தன்னைப் பொறுத்தமட்டில் தொண்டுசெய்து அடிமையாகவே நின்றும், அரச செல்வத்தில் வீற்றிருந்து ஐம்புலனும் ஆரத் துய்த்தாலும், அப்புலன்களின் வழியே ஆண்டவ னழகிய இன்பக் கட லிடையே எழுந்து விளங்கும் உண்மை மலையின் மேலே சுடர் விட்டெரியும் அறிவு விளக்கைக் கண்டு இன்பக் கூத்தே ஆடியும் வாழ்வது ஒருகாலத்தும் தவறல்ல; ஆதலின் அவ்வழியில் அரச செல்வத்தில் வீற்றிருந்த மூர்த்தி நாயனாரிடத்தும் எள்ளளவும் குற்றம் இல்லையாம். இத்தகைய உயிர் ஓவியத்தையே தமதுள்

ளத்தே அழகொழுக எழுதிப்பார்த்து மனமும் நாவும் பழகியபின் னர்ச் சேக்கிழார்பெருமான் இப் பாடல்களைப் பாடி யருளினர்.

ஏலங்கமழ் கோதையர் தந்திறமென்று நீங்கும்
சீலங்கொடு வெம்புலன் தெவ்வுடன் வென்று நீக்கி
ஞாலந் தனிநேமி நடாத்தி நலங்கொள் ஊழி
காலம் உயிர்கட் கிடரான கடிந்து காத்து.

பாதம் பரமன்னவர் சூழ்ந்து பணிந்துபோற்ற
வேதம் பிணியாவகை யிவ்வுலகாண்டு தொண்டின்
பேதம் புரியா வருட் போரசாளப் பெற்று
நாதன் கழற் சேவடி நண்ணினர் அண்ணலாரே.

என்று சேக்கிழார் பாடுதல் காண்க. அரச செல்வத்தே யிருந் தும் ஐம்புலனையும் வென்றமையை "வெம்புலன் வென்று" என்ப தாலும், அரசராய் வீற்றிருந்தும் அடிமைத்தொழிலைக் கைவிடாது பற்றி வாழ்ந்தமையை "தொண்டின் பேதம் புரியா" என்பதா லும் "காசே கடவுள் என வழிபட்டாலும்" தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் விளங்கினமையை "அருட் போரசாளப் பெற்று" என்பதாலும் குறிப்பது காண்க.

புதிய உலகம்:—இவ்வாறு சேக்கிழார் பெருமான் ஆளு டைய நம்பிகள் காட்டிய வழியைப் பின்பற்றிச் சென்று ஒரு புதிய உலகத்தைப் படைத்துக் கொடுக்கின்றார். புதிய குடி முறை, புதிய அரசியல், புதிய துறவுநிலை, புதிய திருப் பிராட்டி வழிபாடு, புதிய துப்புரவு நிலை என்பவற்றை அந்தப் புதிய உல கத்தே நிலைநாட்டியுள்ள பெருமையினையும் அவருடைய நோக் கத்தின் அகலத்தையும் அறிவின் ஆழத்தையும் அறிவது அருமை யினும் அருமையாகும். இந்நாளில் இவ்வுலகிற்கு இன்றியமை யாததொரு புனைந்துரை வரலாறல்லவா ஈது? இவ்வுயரிய கொள்கைகளை இவ் வரலாற்றில் எவ்வாறு நுழைத்து வைத்தார்? "அப்பம் எப்படிச் சுட்டாளோ, அதனுள் தித்திப்பை எப்படி நுழைத்தாளோ!" என்று கேட்கும் இளங் குழந்தைகளின் முனைப் பற்ற இன்ப வமைதி நிலையிலிருந்து நாமும் வியப்போமாக.

ஓவியக் கூத்து :—இத்தகைய உயரிய ஓவியத்தை எழுத வேண்டிப் பொதுமக்களிடையே பொது மகனை ஒருவனை எடுத்து நல்லதோர் நாட்டில் பிறக்க வைத்துச் சிவத்துறையில் பழக்கி, அன்பாக்கி, அவ்வன்பு வளர்ந்தபோது அவனுக்கே முடிசூட்டித் திருவோலக்கத்தில் சிவத் துறவுநிலை மாறாது தொண்டராய்த் தன்னுயிர்போல மன்னுயிரை எண்ணி அரசாள்வதனை இவ்வுயிரோவியக் கூத்திலே காட்டுகின்றார். இக் கூத்து எவ்வாறு மொக்கு விட்டு அரும்பிப் பூத்துக் காய்த்துப் பழுத்துத் தித்திக்கின்றதெனக் காணுதல் வேண்டாவோ?

(தொடரும்)

இலக்கணமும் இலக்கியமும் :
Language & Literature

தமிழகம்

[திரு. S. நடராஜன், B. A.]

(முன் கசுஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டைத் தமிழகம்

10. இவ்வாறு, முதலில் குளிர்ந்து நிலமாகமாறி முதலில் மக்களினம் தோன்றிய பகுதியில்தான், தமிழகம் உளது. பண்டைத் தமிழகம், குமரி முனைக்குத் தெற்கே வெகுதூரம் பரவியிருந்து, இதுபோழ்து கடல்கொண்ட, இலங்கை, அல்லது இலமூரியா என்னும் குமரிக் கண்டமேயாம். இதுபோழ்து * தமிழர்களின் தாய்நாடாய்த் திகழும், இத் தென்னிந்தியா பண்டைத் தமிழகத்தின் வடபாகமாகும். மற்றைய பாகங்கள் கடல்வாய்ப்பட இப் பகுதி மட்டும் எஞ்சிற்று. எனவே தென்னிந்தியா ஓர் பழைய நிலப்பரப்பெனல் வெள்ளிடை.

தென்னிந்தியா பழைய நிலப்பரப்பெனல்

11. i. நிலநூற் சான்று: நிலநூல், தென்னிந்தியா பழைய நிலப்பரப்பென்பதற்கு அளிக்குஞ் சான்றுகளைக் கவனிப்பாம். நிலநூலார் ஒரு நாட்டின் தொன்மையை, அந்நாட்டின் பாறைகளின் இயல்பால் உணர்வர். ஏனைய பாறைகளைக் காட்டிலும் நந்தமிழ் நாட்டுப் பாறைகளே மிகவும் பழைமையானவைகளா மென்பது மேலைநாட்டு ஆராய்ச்சியாளரின் கருத்து. கிழக்குத் தொடர்ச்சி மலைப் பாறைகளே வயதளவில் இமயமலையினும் முதியவையாம்.

12. ii. தொல்லுயிர்நூற் சான்று: இனித் தொல்லுயிர் நூல் பகரும் சான்றுகளை ஆராய்வாம். இந்நூலார், கிளிஞ்சல் மீன், நண்டு, பாம்பு, ஆமை, பறவை, விலங்கு, குரங்கு, மனிதன் என்னும் படிப்படியான ஓர் வளர்ச்சிமுறைப் (evolution)படி மக்கள் உண்டாயிருக்கவேண்டும் என்பர். மண்ணுலகெங்கும் மங்காப்புகழ்

*தமிழர் என்பார் Non-Nordic Cacasians known as Mediterranean

R e

பெற்ற Huxley, Spencer, Lemark, Walise, Heckel, Charles Darwin, முதலிய நிலநூல், தொல்லுயிர் நூல் வல்லார், முன் குறித்த வளர்ச்சி முறைப்படி குரங்குகளினின்றும் மனிதனாக மாறி 250,000 வருடங்கள் ஆகிறதென்றும், இந்த உண்மையை நிலைநாட்ட உலகில் 224,000 ஆண்டுகட்குமுன் அவர்கள் கையாண்ட கல், கொம்பு, தந்தம் முதலான முரட்டுக் கருவிகளும் மானிடதேக எலும்புகளும், கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன என்றும் கூறுகின்றனர். (Vide The Prehistoric Anthropology by Mon. Gabriel-de-Martillet.) மேலும் இன்னர் கூற்றுப்படி பழைமையான ஒரு நிலப்பகுதியைத் தோண்டிப்பார்க்குங்கால் எலும்புக் கூடுகள் தொகையிலும், வகையிலும், தொன்மையிலும், அதிகமாய் இருத்தல்வேண்டும். உலகின் மற்றைய பாகங்களைவிட தென்னிந்தியாவில்தான் இம்மாதிரி கிடைத்திருக்கிறது. தென்னிந்தியாவில் கிடைத்த ஒரு மானிட மண்டை ஓடே பிற நாடுகளில் அகப்பட்டவைகளில் தொன்மையானதாம். *

13. எனவே தொல்லுயிர் நூலும், நிலநூலும் தென்னிந்தியா ஒரு பழைய நிலப் பரப்பென்பதை வலியுறுத்துகின்றன. இனி, ஏனைய பாகங்கள் கடற்கோட்பட இப்பகுதி எஞ்சிற்று என்பதற்கு நில நூலும், மொழிநூலும் கூறும் சான்றுகளை ஆராய்வோம்.

கடற்கோட்படுதல்

14. உலகின் மேற்பரப்பில் நிலப்பகுதி எப்போதும் ஒரே வடிவாயிருந்ததில்லை. கடல் இருந்த இடத்தில் நிலமும், நிலம் இருந்த இடத்தில் கடலும் மாறிமாறி வருவதுண்டு. பல்லாயிரம் ஆண்டுகளாகவே, இம்மாதிரி கடல் நிலமாகவும், நிலம் கடலாகவும், மாறிக்கொண்டு வந்திருக்கிறது. இன்றும், நாம் சில தீவுகள் மறைவதையும் புதுத் தீவுகள் தோன்றுவதையும் காண்கிறோம். ஞாலத்தின் வயிற்றில் கொதித்துக்கொண்டிருக்கும் நெருப்புக் குழம்பானது, சில சமயங்களில் பல காரணங்களால் சில பகுதிகளை மேல்நோக்கி முட்டித் தாக்குவதுண்டு. இதைப் பூகம்பம் என்பர். இவ்வாறு இடியுண்ட பாகம் உயரக் கிளம்பிப் பெருமலையாயும் புதிய நிலப் பரப்பாயும் மாறும். ஒருபாகம் உயர்ந்தால் மற்றொருபாகம் தாழ்ந்து கடற்கோட்படும். இது நிலநூல் கூறும் உண்மை. இவ்

* P. V. Manicka Naicker's Tamilagam in Senthamil Selvi.

வாறு கடல்வாய்ப்படுதலே கடற்கோள் என்பர். 1819-ம் ஆண்டில் உண்டான பூகம்பத்தால் குச்சு நாட்டில் 70 கல் நீளமும் 16 கல் அகலமுமுள்ளபூமி 10 அடி உயரம் எழும்பிவிட்டது. 1822-ம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவின் மேல்கரையில் 1200 கல் தூரத்துக்குப் பூகம்பம் உண்டாகித் தரையைப் பல அடிதூரம் எழுப்பிவிட்டது. 1855-ம் ஆண்டில் லிஸ்பன் பட்டணத்தில் பூகம்பம் உண்டாகி ஊரையே பாழாக்கிவிட்டது. தற்சமயம் சென்னையின் வடபாகத்தில் கடல் ஏறிவருவதும், இம்மாதிரி ஏறிவந்தால் இன்னும் சுமார் 25 ஆண்டுகளில் திருவொற்றியூர் சாலேவரைக் கடல்வாய்ப்படும் என்பதும் நிலநூலாரின் கூற்றுகளாகச் சென்னைத் தினசரித்தாளாகிய ஹிந்துவில் வெளியாயிருந்தது. உலகில் மிகப்பழைய இனத்தாராகிய தமிழர், யூதர்களுடைய இலக்கியங்களிலும் கடற் பெருவெள்ளங்கள் கூறப்பட்டிருக்கின்றன. யூதர்களின் மறையும் கிறித்தவர்களின் பழைய ஏற்பாடும் ஆகின்ற (Old Testament)ல் நோவா என்பவர் காலத்தில் ஒரு பெருவெள்ளம் கூறப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியங்களில் குமரிமுனைக்குத் தெற்கே இருந்த பல நாடுகளும் நகரங்களும், ஆறுகளும், மலேகளும் இரு பெருவெள்ளங்களால் அழிக்கப்பட்டனவெனக் கூறப்பட்டுள்ளது. இவ்வுண்மை இற்றைநாள் நவீனராய நமக்கு மாத்திரமன்று; பண்டைக்காலத்து ஆன்றோருக்கும் புலனாயதேயாம். அஃது "ஓர் இடமழியப் பின்னும் ஓரிட நிற்கும்." † என்னும் சித்தியார் செய்யுளாற் பெறப்படும்.

நான்கு ஊழி

நிலநூலார், காலத்தை, நான்கு ஊழிகளாகப் பிரித்து ஒவ்வோர் ஊழியிலும் நிலப்பரப்பு இன்ன வடிவோடிருந்திருத்தல் வேண்டும் என யூகித்துப் படங்களமைத்திருக்கிறார்கள். இப்படங்

---

†. P. V. Manicka Naicker Tamilagam in Senthamil Selvi

உயரிலங்கு மூலகிற் பல வூழிகள் தோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்கும் பிரமாபுரம் ... ... —சம்பந்தர்

வானந் துளங்கில்என் மண்கம்பம் ஆகிலென் மால்வரையுந்
தானந் துளங்கிதலே தடுமாறிலென் தண்கடலும்
மீனம்படிலென் விரிசுடர் வீழிலென்........... —அப்பர்

கருமைபெற்ற கடல்கொள்ள மிதந்ததோர்காலம் மிதுவென்னப்
பெருமை பெற்ற பிரமாபுரம்...... —சம்பந்தர்

எனவரும் பாசுரங்கள் ஒப்புநோக்கத்தக்கன.

களில் முதல் மூன்று ஊழியில் தென்னிந்தியாவிற்குத் தெற்கே ஒரு நிலப்பகுதி யிருந்ததாகவும் அதற்கு லெமூரியா எனவும் பெய ரிட்டிருக்கிறார்கள். இந்த லெமூரியாவே தமிழகமாகிய குமரிக் கண்டமாம். மூன்றும் ஊழியினிறுதிவரை சீனக்கடலிலிருந்து வடகடல்வரை ஒரே நீர்ப்பகுதியா யிருந்திருக்கிறது. அக்காலத்தில் இமயமலை, சிந்து கங்கைச் சமவெளி, பாரசீகம், அரேபியா, பாலஸ்தீனம், எகிப்து முதலிய நாடுகளும் மலைகளும் கடலின் அடியில் இருந்திருக்கின்றன. மூன்றும் ஊழியினிறுதியில் மாறுத லடைந்து இக்கால வடிவை அவை அடைந்துள்ளன. இமயமலையை கிழக்குத்தொடர்ச்சிமலையினும் இளமலையாகக் கருதுவதும், அதன் உச்சியில் கடல்வாழ் உயிர்களின் எலும்புக் கூடுகளும், சிப்பிகளும் காணப்படுதலும் அஃது கடலினுள் இருந்ததற்குச் சான்றுகளாம். இஞ்ஞான்றும் சகாராபாலைவனம் தொடங்கி கோபி பாலைவனம் ஈறாகத் தொடர்ச்சியாகப் பாலைநிலம் காணப்படுதல், இப்பாகம் கடலினுள் இருந்ததற்கு ஓர் சான்றெனவும் பகர்வர். சில மேற் றிசைச் சான்றோரின் கூற்றுகள் இதனுடன் கருதற்பாலன.

(தொடரும்)

வெண்ணெய் அண்ணல்

[பண்டிதர். திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள்]

(முன் கசுரு-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வானர வீரர்கள் கடலில் அணையைக் கட்டுகையில் உயர் வெற்புகளைத் தூக்கி வானரத் தச்சனாகிய நளன் என்பானிடம் வீச, அலைப்புண்டு வந்த அப் பருப்பதங்களை நளன் ‘அஞ்சேல்’ எனச் சொல்லி, அவற்றைத் தாங்கி முறையாகவும் அமைதியாக வும் அடுக்கினன். அங்ஙனம் நளன் செய்தமை ‘தஞ்சமென் றடைந்தோரைத் தாங்கித் தக்கவாறு பாதுகாக்கும் அண்ணலது காருணியச் செயலை யொத்திருந்தது’ எனக் கம்பர் கூறுவது சால அழகியதன்றோ?

‘ மஞ்சினில் திகழ்தரு மலையை மாக்குரங் (கு)
எஞ்சுறக் கடிதெடுத் தெறியவே, நளன்
விஞ்சையில் தாங்கினன் சடையன் வெண்ணெயில்
தஞ்சமென் றோர்களைத் தாங்குந் தன்மைபோல்.’

—சேதுபந்தனப் படலம்

'மேகநாதன் வானர சேனையை நாக பாசத்தாற் பிணித்து விட்டனன். அந் நாக பாசம் கருடனைக் கண்டதும் இற்று ஒழிந்தது. அஃது, வடமொழி வறிஞரையும், தென்மொழி வறிஞரையும் பிடித்திருந்த வறுமைப்பிணி வெண்ணெய்வாழ் அண்ணலைக் கண்டதும் இற்றொழிந்ததை யொத்திருந்தது' என்று கம்பர் கூறும் உவமையையும் பொருளையும் எண்ணிப் பாருங்கள். இதனால், வள்ளலின் வள்ளற்றன்மை குன்றின்மீதிட்ட விளக்குப் போலாம்! கம்பர் வீணுகச் சடையப்பரை ஏன் இக்காதையில் இழுக்கின்றார் என்று நாம் எண்ணிச் சலிப்படையாவாறு, உவமை வாயிலாகச் சடையரின் அரிய செயலையும் குணத்தையும் கூறித் தமது செய்ந்நன்றி யறிதலையும் விளக்குவது கம்பர்மாட் டமைந்த தனிப்பெரும் ஆற்றலே யன்றோ!

'வாசங்கலந்த மறைநாள நூலின்
வகையென்ப தென்னை மழையென்
றூசங்கைகொண்ட கொடைமீளி யண்ணல்
சரராமன் வெண்ணெ யணுகும்
தேசங்கலந்த மறைவாணர் செஞ்சொல்
அறிவாள ரென்றிம் முதலோர்
பாசங்கலந்த பசிபோ லகன்ற
பதகன் துரந்த உரகம்'

—நாகபாசப் படலம்

இக்கவியால், அண்ணலது ஈத்துவக்கும் செவ்வியும், வடமொழி, தென்மொழிப் புலவர் என்ற வேறுபாடின்றி வழங்கும் ஈகைக்குணமும், தாளாண்மையிற் சிறந்த வேளாண் மக்களின் மாண்பும் இற்றெனஇனிது விளங்கும்.

இறுதியாகக் கம்பர் தம்மை வளர்த்து உயர்நிலைக்குக் கொணர்ந்த வள்ளலாரை உலகறிய உயர்ந்த நிலையில்—எவர்க்கும் எட்டாத உயர்நிலையில்—அழகுற வைத்துப் பெருமைப் படுத்தியுள்ளார். 'இராமனுக்குக் கோசலத்தின் மௌலி சூட்டிய மாண்புறு விழாவில் இராமனைத் தாங்கும் அரியணையை அநுமன் தாங்கினன்; அங்கதன் உடைவாளேந்தி நின்றான்; பரதன் கொற்றக் குடையைக் கவித்து நின்றான்; இலக்குவனும் சத்துருக்கனனும் கவரி வீசிநின்றனர்; வாசனை கமழும் கூந்தலையுடைய சானகி உவகையோடு அருகிருந்தனள். இந் நிலையில்

வெண்ணெய் அண்ணலின் மரபில் வந்த வேளாண்குடிப் பெரு மக்கள் கிரீடத்தை யெடுத்துத் தம் அநுமதியோடு தர— அதனை வசிட்டன் வாங்கிச் சீராமனுக்குச் சூட்டினன்,' என்று, கம்பர் அழகினும் அழகுபடக் கூறியுள்ளார். இவர் கூற்றில் விழுமிய வேளாளர் தத்துவம் என்னும் தரு சீருடன் விளங்கக் காணலாம்.

'அரியணை அநுமன் தாங்க, அங்கதன் உடைவாளேந்தப்,
பரதன்வெண் குடைக விக்க இருவரும் கவரி வீச,
விரைசெறி குழலி யோங்க, வெண்ணெயூர்ச் சடையன் றங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி'

—திருவபிஷேகப் படலம்

இங்ஙனம் ஈடும் எடுப்பும் இல்லாதவோர் வகையில் தம் வள்ளலைக் கம்பர் புகழ்வதைக் காண, அவர் வெண்ணெய் அண்ணலிடம் கொண்டிருந்த பெருமதிப்பு இற்றென விளங்குகிறதன்றோ! 'இனி, நீர் சீராமனுக்கு முடிசூட்டலாம்' என்று வசிட்டனுக்கு அநுமதி கொடுத்தற்கேற்ற பெருமைபெற்றவர் 'சடையப்ப அண்ணலின் முன்னோர்' என்று கூறுமுகத்தான் வேளாளரே அரசனுக்கு உயிர்போன்றவர்' என்னும் உண்மையைக் கம்பர் விளக்குகின்றார். இக்கருத்தைக் கொண்டே ஔவையாரும் 'குடி உயரக் கோன் உயரும்' என மொழிந்தார்.

'மேழி பிடிக்குங் கையே
ஆழி வேந்தரை யாக்குங்கை'

என்பது அரசியலின் அடிப்படையான தத்துவம் அன்றோ?

தமிழ்மொழியின் ஒலிகளும் எழுத்தும்

[ஈப்போ. திரு. தியாகராயன் அவர்கள்]

(முன் ௧௬௯-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழெழுத்துக்களின் தொகை

முதலெழுத்து

"உயிரு முடம்புமா முப்பது முதலே"

(பவண. எழு. சூ. 58)

சார்பெழுத்தின் விரி

"உயிர்மெய் யிரட்டு நூற்றெட்டு, உயராய்தம் எட்டு, உயிரளபு எழுமூன்று, ஒற்றளபெடை ஆறேழ், அஃகும் இ முப்பானேழ், உகரம் ஆறாறு, ஐகான் மூன்றே ஔகா னொன்றே, மஃகான் மூன்றே ஆய்த மிரண்டொடு, சார்பெழுத்துறுவிரி ஒன்றொழி முந் நூற்றெழு பானென்ப"

(பவண. எழு. சூ. 60)

மேற்காட்டிய சூத்திரங்களின்படி

உயிர்	12
மெய்	18
உயிர் மெய்	216
விகாரப்படாத ஆய்தம்	8
உயிரளபெடை	21
ஒற்றளபெடை	42
குற்றிய லிகரம்	37
குற்றிய லுகரம்	36
ஐகாரக் குறுக்கம்	3
ஔகாரக் குறுக்கம்	1
மகரக்குறுக்கம்	3
ஆய்தக்குறுக்கம்	2
ஆக	399

மேற்கூறியவற்றுள் உயிர், மெய், உயிர்மெய் ஆகிய 246 ஒலிகளுக்கும் தனித்தனி எழுத்துக்களுள்ளது யாவருமறிந்ததே.

இலக்கண விதிப்படி சொற்களில் எண்வகையில் நிறுவப்பட்ட ஆயுதங்கள் முற்றுய்தங்களாம். எனினும் அவ்வெட்டு வகையிலும் அவ் வாய்தங்கள் ஒரே யொலியுடன் நிகழ்வதால் ஓரெழுத்தே அவற்றைக் குறித்தது.

மேற்கூறியவாறே இலக்கண விதிப்படி 63 இடங்களில் உயிர், மெய்கள் அளபெடுக்கும்.

உயிரளபெடை

"இசைகெடின் மொழி முதலிடை கடைநிலை நெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே"

(பவண. எழு. சூ. 90)

ஒற்றளபெடை

"ஙஞண நமன வயலள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீழிடை கடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே"

(பவண. எழு. சூ. 91)

என்னுஞ் சூத்திரங்களின்படி மேற்கூறியவாறு அளபெடுத்தொலிக்குங்கால் அவ்வவற்றின் இனக் குறில்களும், ஒற்றுகளும் குறியாய் நின்று அளபை யுணர்த்துவதால் இவைகளுக்கேற்ற குறிகளுமுண்டாம்.

மகரந்தவிர்த்த குற்றியலிகர முதலிய குறுக்கங்களான 79ம், இலக்கண விதிப்படி நிகழும் வகையைக் குறித்து 79 ஆயினவே யன்றி ஒலிவகையில் அவை ஐந்தே.

பவணந்தியார் நன்னூலில் "எழுத்தினுருவம்" என்னுஞ் சூத்திரத்திற்கு உரையெழுதிய சாமிநாதையர் "அறிதற்பொருட்டுக் குற்றுகரக் குற்றிகரங்களுக்கு மேற்புள்ளி கொடுப்பாரு முளரெனக் கொள்க" என உரைத்தார்.

உதாரணம்:—நாகியாது, வாகு

எனவே மேற்காட்டிய குறியை நாம் குற்றுகர இகரங்களுக்கு மாத்திரமன்றி ஐகார, ஔகார, ஆய்தக்குறுக்கங்களுக்கு மியைப்பின் அஃகு (குறையும்) மொலிகள் யாவற்றிற்கு மேற்ற குறியுண்டாம்.

ஆனல் மகரக் குறுக்கத்திற்கு மேற்கூறிய குறி கொடுப்பின் மகர வொற்றை யொத்து (ம் என) ஐய முண்டுபண்ணும். ஆகலின் தொல்காப்பியம் எழுத்தியல் 13-வது சூத்திரத்தில் "அரையளவு குறுகன் மகரமுடைத்தே— இசையிட னருகுந் தெரியுங்காலை" என்று கூறி அடுத்த சூத்திரத்தில்

"உட்பெறுபுள்ளி யுருவாகும்மே" என்ருர். எனவே இம் மகரக் குறுக்கத்தின்குறி "ம" என எழுதப்பட்டு அதன் ஒலியைக் குறிக்கும்.

இவ்வாருக முன்சொன்ன எழுத்தின் தொகை 399-ன் ஒலிக்கும் ஏற்ற குறிகளுண்டாம்.

எனவே ஓரொலிக் கொருகுறி யென்னுஞ் சிறந்த விதியை வழுவாது தழுவிய மேன்மையுடைத்தாம் நந்தமிழ்மொழி. இக்

கூற்ருல் இம்மொழியைச் செம்மொழியென வுரைத்தல் சாலத் தக்கதே.

சீர் திருத்தம்

பவணந்தியார் நன்னூலி னிறுதியில்
"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவலகால வகையினுனே"
(சூ. 461)

எனக் கூறப்பட்டிருக்கிறது.

தொல்காப்பியனுரும்
'கடிசொலில்லைக் காலத்துப்படினே'
எனவுங் கூறியுள்ளார்.

மேற்கூறிய விதிகளைத்தழுவி நாமும் இக்காலத்திற்கு ஒப்ப நம்மொழியின்கண் சீரிய திருத்தங்களமைப்பின் நம்மொழி இன்னு மிகத் திகழ்ந்து வளரும். எங்ஙனம் ஒரு மகன் தந்தை ஈட்டிய பொருளை நல்வழியாற் பெருக்குவது கடனே அஃதேபோல் நாமும் நம்முந்தையோர் நமக்களித்த தமிழ்ச் செல்வத்தைச் சீரிய வகையில் சிறப்பிப்பது நமது கடனே.

மெய்யெழுத்துக்களின் ஒலியை முன் விளக்கிக் காட்டிய பொழுது வல்லெழுத்துக்களைத் தழுவி மெல்லோசையுட னெலிக்கு மெனக் கூறினேன். அவ்வொலிகளைக் குறிக்க ஏற்ற குறிகள் தமிழில் தற்போது கிடையா. அன்றியும் 'செய்பவன்', 'பசித்தல்,' 'உகுதல்', என்னுஞ் சொற்களிலுள்ள 'ப', 'சி', 'கு' என்னு மெழுத்துக்களில் நிகழும் ஒலிகளுக்கேற்ற குறிகளும் தமிழில் இல்லை.

ஆனல் வடமொழிச் சொற்கள் தமிழில் மிகப் புகுந்தகாலத்தில் அச்சொற்களின் ஒலிகளைக் குறிக்க ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ என்னு மெழுத்துக்களை நாம் ஏற்று, நம் அரிச்சுவடியிலு மிவற்றைக் கூட்டிக்கொண்டோம். இவ்வகை காலத்திற்கேற்கப் புதியமொழிகளையும், அம்மொழிகளின் ஒலிகளைக் குறிக்கப் புதிய எழுத்துக்களையும் புகுத்ததால் முற்கூறிய குறியற்ற சில ஒலிகளுக்கு ஏற்ற குறிகள் தமிழில் உண்டாயின. எவ்வாறெனின்:

பசித்தல் என்னுஞ் சொல்லில் 'சி' என்னுமெழுத்திற்குள்ள 'ஸி' என்னு மெழுத்தால் குறிக்கப்பட்டது. (தொடரும்)

ஆராய்ச்சிப் பகுதி-Research

சோழர்கள் கல்வெட்டுகளிற் கண்ட சில குறிப்புக்கள்

[இராவ்சாஹிப் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள்]

(முன் கஎச-ஆம் பக்கத் தொடர்ச்சி)

5. பெரகர முற்றூட்டு:— இதற்கு the land enjoyed in full by the great village என்று சாசனப் பரிசோதகர் பொருள் கூறுகிறார். இம் மொழித் தொடரை பேர்—அகரம்—முற்றூட்டு என்று பிரிக்கவும். அதாவது, பெரிய கிராமத்தி னுடைய முழுமையான அனுபவம் என்று பொருள் ஏற்படும். அதனைக் கிராமத்துப் பெரிய குடிகளெல்லாம் பூரணமாக அனுப விக்கும் உரிமைகள் என்று கொள்ளலாம். இதனை மற்றொரு சாசனத்தில் "கணி முற்றூட்டு" என்று கண்டிருக்கிறது. ஆகவே கிராமங்களில் உள்ள முழுமையான உரிமை அல்லது பாத்தியம் என்று இப் பதத்தினால் ஏற்படுகிறது எனக் கொள்ள முடியும்.

6. மேனோக்கியமரம்:—இதனை Trees over ground என் கிறார். இக்காலத்தில் நாம் எழுதும் பதங்களாகிய மாவிடை, மர விடை என்பவை இதில் அடங்கும். சாசனத்தில் கண்ட இடத்தில் இருந்த மரங்கள் எல்லாவற்றையும் அதற்குள் சேர்த்ததாகப் பொருள்பட வேண்டி, இத்தொடர் சேர்க்கப்பட்டுள்ளது.

7. கீழ்நோக்கிய கிணறு:—Wells under ground, நிலத்தின் கீழே வெட்டப்பட்ட கிணறுகள் சேர்த்துத் தரப்பட்டன என்பது பொருள். இக்காலத்தில் "தாஸ்துக் கிணர் இகிஸ்துக் கிணர் சகிதம்" என்பார்கள். அல்லது "இரண்டு துலைக்கிணர் மூன்று துலைக்கிணர்" என்பார்கள். "மேனோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும்" என்ற பிரயோகம் எதுகை நோக்கி எழுதப்பட்டன போலும்.

8. முளைப்பன:—Where sprouts grow. இப்பதம் ஒரு சாசனத்தில் அதிகமாகக் கண்டிருக்கிறது. இதனால் வேளாண்மை செய்யும் நிலம் என்ற பொருள்படும். புற்று எழுவன, முளைப்பன

என்று அச் சாசனத்தில் கண்டிருப்பதால், இவைகள் சொல்லணியாகிய இயைபுத் தொடையை நோக்கி எழுதப்பட்டன போலும்.

மேலே சொல்லிய சாசன வாசகத்தைக் கரூர்ச் சாசனங்களில் மாத்திரமே யல்லாமல் அநேக ஆலயச் சாசனங்களிலும் செப்பேட்டுகளிலும் காணலாம். ஆகவே இவ் வாசகம் தமிழ்நாடெங்கும் பரந்திருந்தது எனக் கொள்ளலாம். உதாரணமாக, காசாக்குடி சாசனம் என்ற நந்திவர்மன் II (717-779 கி. பி.) என்ற பல்லவ அரசனுடைய சாசனத்தில் "இந்நாட் பேரெல்லை உள்ளும் ஆகப்பட்ட நீர்நிலம் புன்செய்யும் உடும்போடு ஆமை தவழ்வதெல்லாம் சேயாற்றாலும் வெஃகாவினாலும் திரைய னேரியாலும் நீரீந்த வழி ஆற்றுக்காலும் வெள்ளக்காலும் தோண்டிக்கொண்டுண்ணப் பெறுவனாகவும்" என்று கண்டிருக்கிறது. ஆகவே "உடும்பொடு ஆமைதவழ் இடம்" புறம்போக்கு நிலமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேலும், தானம் செய்த நிலத்தினுடைய எல்லைகளை அடியில் கண்டவாறு விவரித்திருக்கின்றார்கள்.

"அதிராதராஜ மண்டலத்து வெங்காலநாட்டு கணவதிநல்லூர் கீழ்பாக்கெல்லை எருத்துக்குளத்துக்கு மேற்கும், வடபாக்கெல்லை நாட்டுப் பெருவழிக்குத் தெற்கும், தென்பாக்கெல்லை ஆற்றுக்கு வடக்கும், மேல்பாக்கெல்லை இராஜமகேந்திரன் வதிக்குக் கிழக்கும், இந்நான்கெல்லைக் குட்பட்ட நிலம் நன்செய் புன்செய்." இவ் வாசகத்தால் எல்லைகள் எவ்விதமாக எடுத்தாளப்பட்டன என்பது தெரியவரும். குளம், ஆறு, வழி இவைகள் எல்லைகளாகக் கொண்டிருந்தார்கள் என்றும் நன்செய் புன்செய் என்ற பாகுபாடு பல்லாயிரம் ஆண்டுகளாகவே இருந்தது என்றும் அறிகிறோம்.

III. நில மாறுதல்களின் நிபந்தனைகள்

இக்காலத்தில் கிரயம், அடவு, ஒப்பந்தம் முதலியவைகளில் பல நிபந்தனைகளை(Covenants)க் கண்டு பத்திரங்கள் எழுதுவதுண்டு. அதைப்போலவே சோழர்கள் காலத்திலும் நிபந்தனைகளைக் கொண்டிருந்தார்கள். இறையிலியாக நிலங்களை ஆலயங்களுக்குத் தானம் செய்தபோதிலும் அந்நிலங்களுக்கு இறைகள் இல்லாமல் போகவில்லை என்றும், அவ்விறைகள் தானம் கொடுக்கப்பட்ட ஆலயங்களுக்குச் சேரும் என்றும், முன்னமே கூறியிருக்கின்றோம். ஆனால் சில தானங்களில் அவ்வித இறைகள் அல்லது

வரிகள் சில குடிகளுக்கு நீக்கப்பட்டன வென்றும் சில சாசனங்களினல் அறிகிறோம். உதாரணமாக, ஆலயத்திற்கு தேவதானம் செய்யுங்காலத்தில் அவ்வாலயத்துத் திருமடை விளாகத்தில் குடியிருந்த சில குடிகளின்மீது குறிப்பிட்ட சில வரிகளை விதிக்கக்கூடாதென்றும் நிபந்தனை ஏற்படுத்துவதுண்டு. கரூர் கோனேரின்மைக்கொண்டான் சாசனத்தில் "இங்நாயனர் கோயிலுக்கு நம் பெயரால் இயற்றின வீர சோழன் திருமடைவிளாகத்தில் குடியிருந்த தவசியர்க்கும் சிவப்பிராமணருக்கும் தேவரடியார்க்கும் உவச்சர்க்கும் பல பணி நிபந்தக்காருக்கும் சீவனசேஷமாகத் தென்கரை ஆதனூரான வீர சோழ நல்லூர் கொடுத்து இவ்வூரால் வந்த இறையும் எலவையும் உகவையும் கொள்ளாதோமாக. விட்டு மற்றுள்ள குடிமைப்பாடும் எப்பேர்ப்பட்டதும் இங்நாயனர் கோயிலுக்கு செய்து," என்று கண்டிருக்கிறது. இச்சாசனத்தினல் கோயிலுக்கு அடுத்த திருமடை விளாகத்தில் குடியேறி இருந்த தவசிகள் (சந்நியாசிகள்) சிவப் பிராமணர்கள் (ஆதிசைவர் என்ற குருக்கள்) தேவரடியார் (கணிகையர்) உவச்சர் (வாத்தியம் வாசிப்பவர்) நிபந்தக்காரர் (கோயில் வேலைக்காரர்கள்) ஆகிய இந்த திருப்பணியாளர்கள் இறை, எலவை, உகவை என்ற மூன்று வரிகளைக் கொடுக்கவேண்டியதில்லை என்றும் மற்ற வரிகளாகிய குடிமைப்பாடுகள் வசூலித்துக்கொள்ளலாம் என்றும் நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டன.

2. மேலும், நிலங்களைத் தானம் செய்யும்போது நீர்ப்பாய்ச்சல்களைப்பற்றிச் சில நிபந்தனைகள் ஏற்படுத்துவதுமுண்டு. உதாரணமாக, குலோத்துங்க சோழதேவனுடைய சாசனத்தில் "செங்நீர் வெட்டி செய்யக்கடவதல்லை ஆகவும், புங்நீர்விட்டுப் பாய்ச்சிக் கொள்வதாகவும், இப்படி சம்மதித்து இறையிலி தேவதானமாகக் கல் வெட்டிக் கொடுத்தோம்." என்று கண்டிருக்கிறது. இதற்கு சாசன பரிசோதகர் Shall not be permitted to waste the good water but shall use the dirty water for irrigation. என்று பொருள்படுத்துகிறார். வாய்க்காலில் வரும் நல்ல நீரை வேளாண்மைக்கு உபயோகப்படுத்தக்கூடாது என்றும், அசுத்த நீரை உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்றும் பொருளாம். ஆனல் வாய்க்காலில் வரும் நீரை எவ்விதமாக நல்ல நீர் கெட்ட நீர் என்று பிரிப்பதோ தெரியவில்லை. வாய்க்காலிலும் ஆற்றிலும்

வெள்ளம் வரும்போது கலங்கிய நீர் வரும். அதைப் பாய்த்துக் கொள்ளலாம்; மற்றக் காலங்களில் நீர் சுத்தமாக வரும், ஆனல் குறைந்துவரும்; அப்போது இந்நிலங்களுக்கு அந்நீர்ப் பாய்ச்சல் கூடாது, என்று பொருள்படுத்தலாம். இவ்வித நிபந்தனைகள் இக்காலத்திலும் உண்டு. மேட்டூர் அணைத்திட்டமும் இந்தப் பாகு பாட்டை அனுசரித்தே உள்ளது அல்லவா?

இவ்வாசகத்தில் மற்ருெரு பொருளும் கொள்ளமுடியும். கிராமங்களில் குடிதண்ணீர்க்கிணறு, குளிப்பாட்டும் நீர்க்கிணறு என்ற இரண்டுவகைக் கிணறுகள் உண்டு. குடிதண்ணீர்க் கிணற்றி லிருந்து நிலத்திற்கு நீர் பாய்ச்சக்கூடாது. குளிப்பாட்டுக் கிணற்றிலிருந்து நீர்ப்பாய்ச்சிக்கொள்ளலாம் என்றும் இதனல் நாம் பொருள் கொள்ளக்கூடும். இவ்விதமான நிபந்தனைகள் காசாக்குடி சாசனத்திலும் இருத்தல் காண்க. அவை வருமாறு "இக்கால்களுக்குக் கொங்கலமும் புழுதிபாடும் பெறுவதாகவும். இக்கால்களில் கூடை இறைத்துங் குறுங்கறுத்தும் குற்றேத்தம் பண்ணியும் கொண்டுண்டார் கோக்கொள்ளும் தண்டப்படுவா நாகவும்" என்ற நிபந்தனைகளை நோக்குக.

3. நிலங்களை ஆலயங்களுக்குத் தானம் செய்யும்போது இன்ன காரணத்திற்காகத் தானம் செய்யப்பட்டதென்றும் கண் டிருக்கிறது. உதாரணமாக, "திருவாநிலை மகாதேவர்க்கு வேண்டும் நிமந்தங்களும் பூசைக்கும் திருப்பணிக்கும் மேல்படி நிமந்தத்துக்கு மாக திருநாமத்துக் காணியாக.........கொடுத்தோம்" என்று கண்டிருக்கிறது. இங்கே "நிமந்தங்கள்" என்ருல் செலவுகள் என்ற பொருள்படும். இப்பதம் இக்காலத்தில் பிரயோகிப்பது அரிது. "ஆலயத்திற்குச் செய்யத்தக்க செலவுகளுக்கும் பூசைக்கும் மராமத்து வேலைக்கும் தானம் செய்யப்பட்டது" எனக் கண்டிருக் கிறது. இவ்விதமான காரியங்களுக்கு உபயோகமாவதற்கு "பன் மாகேஸ்வர ரக்ஷை" என்ற காப்பும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வித காப்பு மாத்திரமன்றி, சில சாசனங்களில் தானத்தின் நிபந்தனைகளைத் தடை செய்பவர்கள் "கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொலைசெய்த பாவத்திற்கு உட்படுவார்கள்" என்ற ஆணையும் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்தர்மத்தைக் காப்ப வர்கள் "ஸ்ரீபாதம் என் தலைமேலே" என்ற பெருமையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (தொடரும்)

திருச்சிமலேக் கோயில்

(முன் கஎஎ-ம் பக்கத் தொடர்ச்சி)

எ-வது பட்டம் மவுனம் வைத்திலிங்க சுவாமியவர்கள் செய்து வைத்தத் திருப்பணி திருவாபரணம் வாகனங்கள் பாத்திரங்கள் முதலாகியதுகளின் விபரங்கள் சாலியவாகன சகாப்தம் கசூாகூஉன்மேல் செல்லாநின்ற கர ஷூத்தில் வாணப்பட்டரை பத்திக் கொண்டதில் ஆயிரக்கால் மண்டபத்தில் பாவுகல்லுகள் உத்தரங்கள் முதலாகியதுகளே பேத்து வாரிக் கொண்டு போய் போட்டதில் அந்தக் கல்லுகள் வந்து விழுந்ததில் திருவனந்த வாசலுக்குள்ளே வட புறத்து மண்டபத்தில் பாவு கல்லுகள் சேதமாகிப் போனதையும் கம்பத்தடியில் துஜஸ்தம்பத்தில் பட்டரைக் கல்லுகள் சேதமாகிப் போனதையும் இந்தசேதமான கல்லுகளெல்லாம் உடனே எடுத்துப் போட்டு அதுகளுக்குத் தகுந்தபடி பாவுகல்லுகள் உத்திரங்கள் மலேயடி யடித்துக்கொண்டு வந்து சேர்த்து உயர ஏத்திக்கொண்டு போய் சேதமான தெல்லாம் போட்டு தீர்மானஞ் செய்தும் அப்பால் சித்திர மண்டபத்தில் நெத்திக்கண் முதலாகியதுகளிலும் சித்திரங்கள் எழுதியும் மறுபடி கம்பத்தடி வாசல் முன் சின்னதாயிருந்ததில் சபாபதி யெழுந்தருளினுல் வாசற்படிக்கு அறுகாமையில் வந்தவுடனே சுவாமியைக் கேடகத்துடனே ஓரப்பாட்டில் வாசலுக்கு வெளியில் வந்தின் பேரில் கொம்பு சாத்தி சுவாமி எழுந்தருளுகிறது. இப்படிக்கு வருத்தப்பட்டிருந்ததைப் பார்த்து ஷெ வாசப்படியை எடுத்துப் போட்டு பெரிய நிலேகால் வைத்துக் கட்டியும் கதவு போட்டுந் தீர்மானமான உடனே சுவாமிகோவில் கதவும், அம்மன்கோவில் கதவும், திருவநந்த வாசல் கதவும் இந்த மூன்று கதவுகளுக்கும் பித்தளே யாணியும் வெங்கல மணியும் போட்டுத் தீர்மானஞ்செய்து ஆனதின் பேரில் அம்மனுக்குப் பித்தளேத் திருவாசியும் செய்து வைத்து அப்பால் சுவாமி கோயில் திம்மியில் அம்மன் சந்நிதிக்கு எதிரில் மேலமூலே மேல் மண்டபங்கல்கள் நழுகி இருந்ததுக்கு அடியிலிருந்து மேலருதிக்கு உதைவுகட்டி தீர்மானஞ் செய்தது.

திருவாபரணங்களின் விபரம்:—ஷெ வைத்திலிங்க சுவாமியவர்கள் முன் கர்நாடக முதலாயிருந்த திருவாபரணங்களேயும் திருமஞ்சனத் தங்கக்குடம் வெள்ளிக்குடம் பாத்திரம் வகையறுக்

களை யெல்லாம் கலாபக்காரர்களால் கொள்ளையடித்துக்கொண்டு போய்விட்ட படியினலே அதன்பேரில் இப்போ திருவாபரணங் களில் சுவாமியின் நெத்திப் பட்டமும் அதில் தொங்கு வில்வக் களையும் உச்சவாதிகளுக்கு சாத்துப்படியாகிற வில்வக்களையும் அம்மனுக்குப் பாதாதிகேசம் முதலாகிய கவசமும் மோகனமாலை யும் குண்டு பவடித் தாவடமும் பதக்கங்களும் நாயகர், சீவில நாயகர், சந்திரசேகரர், சுப்பிரமணியர், வள்ளியம்மை, தெய்வயானை முதலாகியதுக்கெல்லாம் வெள்ளிக்கவசமும் ஷ கிரீடம் அபயஸ் தம் சீர்பாத முதலாயதும் சபாபதி ஷ அம்மனுக்கும் அபயஸ்த் தம் சீர்பாதமும் நாயகர் அம்மனுக்கு முத்துக் கொண்டை சந்திர பிறை சூரிய பிறை நெத்திச் சுட்டியும் மூலஸ்தான அம்மனுக்கு நெத்திப்பட்டமும் அதில் தொங்கல் மூக்குத்தியும் வெள்ளிமேல் தங்க மொலாம் செய்த தோடும் செய்துவைத்ததுவுமல்லாமல் சுவா மிக்குத் திருமஞ்சனம் எடுக்கிறதற்கு துறையூர் ஷராப் நஞ்சுண்ட செட்டியார் அவர்கள் ஷ வைத்திலிங்கத் தம்பிரான் அவர்கள் முன்னிலையாய் சுவாமிக்கு உபயமாகச் செய்து வைத்தது வெள் ளித் திருமஞ்சனக்குடம்.

ஷ சுவாமியாரவர்கள் முன்னிலையில் குருநாத செட்டியா ரவர்கள் உபயமாக செய்தது திருமஞ்சன வெள்ளிக்குடம் க.

ஷ வைத்திலிங்க சுவாமியவர்கள் சாலிவாகன சகாப்தம் கஎளஅ கலியுக சகாப்தம் சகஅளஅஎன் மேல்செல்லா நின்ற பாாபவ ஞு வைகாசி மீ சுவாமி அஷ்டபந்தனமும் மண்டலாச்ச மும் பிராமண போஜனமும் ஷ வைத்திலிங்க மௌன சுவாமி கள் செய்துவைத்து சகல செலவுகளும் சொந்தத்தில் போட்டு செய்தது. ஷ சுவாமியவர்கள் செய்துவைத்த வாகன விபரம். சுவாமிக்குப் பெரிய வெள்ளி ரிஷபவாகனம். க. வெள்ளிக்குடை க. கமலவாகனம் 1. கற்பகவிருக்ஷம் 1. கிளிவாகனம் 1. அன்ன வாகனம், மயில்வாகனம் இந்த வாகனங்களெல்லாம் சொந்தத்தில் செய்துவைத்ததுவு மல்லாமல் ஷ சுவாமியின் முன்னிலையில் போசா வெங்கடாஜலபதி முதலியார் அவர்கள் சுவாமிக்கு பிர தோஷ ரிஷபவாகனம் வெள்ளி வாகனமாக உபயமாய்ச் செய்து வைத்தார்.

தொடரும்)

அறிவியற் பகுதி-Science

ஒளிநூல்—(Astronomy)

[திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்]

(முன் கஅக-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கிலாந்தில் கி. பி. 1635-ல் ஹூக் (Hook) என்பவர் பிறந்தார். அவர் சிறந்த ஒளிநூற் புலவராகி இலண்டன் மாநகரத்திய வானூற் சங்கத்திற்குத் தலைமை பூண்டார். அவர் பல துறைகளிலும் புலமை பெற்று, பூமியின் அயனத்தில் நிலைமாற்றம் உண்டா, இல்லையா? என்பதைக் கண்டு பிடிப்பதற்கு உச்சக்கருவி (Zenith Sector) என்ற கருவியைத் தோற்றுவித்தார். கோள்களின் அசைவிற்குக் காரணம் அவை அகன்று போகமுயலும் விசையுடன் இரவியின் கவர்ச்சி சேர்வதுதான் என அவர் எடுத்தியம்பி, பின்னால் நியூட்டனுடைய ஆராய்ச்சிக்கு அடிகோலினார். ஹூக் தமது அறுபத் தேழாவது வயதில் (கி. பி. 1702) மாண்டார்.

ஹூக்கின் காலத்தில் பிளேஅம்ஸ்டெட் (Flamstead) என்ற சோதிநூற் புலவரும் வாழ்ந்திருந்தார். அவர் கி. பி. 1646-ல் பிறந்து 1720-ல் இறந்தவர். அவர்காலத்தில்தான் இலண்டன்மாநகரத்திற்கு அருகிலுள்ள கிரீனிச் என்ற இடத்தில், இப்போது உலகத்திலேயே ஒப்பற்றதாக விளங்கும் அரசாங்கச்சோதி ஆராய்ச்சிச்சாலை (Royal Observatory at Greenwich) கட்டப்பெற்றது. அது கட்டிமுடிந்தவுடன் அப்போது இங்கிலாந்துக்கு அரசராக இருந்த இரண்டாவது சார்ல்ஸ் அரசர் (King Charles II) அவருக்கு அரசாங்க ஒளி நூற்புலவர் (Astronomer Royal) என்ற பட்டத்தைச் சூட்டி அவரை அவ்வாராய்ச்சிச் சாலைக்குத் தலைவராக்கினார். அவர் செய்த பெரிய வேலை யாதெனில் தாமறிந்த மூவாயிரம் ஆகாய விண்மீன்களைக் குறிக்கும் ஓர் அட்டவணை தயாரித்ததே.

அவருக்குப் பின் அரசாங்க ஒளி நூற்புலவரானவர் டாக்டர் ஹாலி (Dr. Halley) என்பார். அக்காலத்தில் அவர் ஒப்புயர்வற்

றவாக விளங்கினர். பூமியின் தென்பகுதியிற் காணப்படும் விண் மீன்களின் அட்டவணை யொன்று தயாரிப்பதற்காக அவர் இரண்டாவது சார்ல்ஸ் மன்னரால் செயின்ட் ஹெலீனு (St. Helena) என்ற தீவிற்கு அனுப்பப் பெற்ருர். அவ்வட்டவணை 1679-ல் வெளியிடப்பட்டது. ஹாலி அத்தீவிலிருந்து ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் போது ஒரு சமயம் இரவிமண்டிலத்தைத் தாண்டிப் புதன் போவதைக் காண நேர்ந்தது; அதிலிருந்து இரவியின் பெயர்ச்சியைக் கணித்தறிவதற்கு அவர் வழிகண்டார்.

டாக்டர் ஹாலி செயின்ட் ஹெலினுவை விட்டுப் புறப்பட்டு இலண்டனை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும்போது பாரிசிற்கும் கலே (Calais) கோட்டைக்கும் இடையில் ஒரு பெரிய வால் வெள்ளி (Comet) யைப் பார்த்தார். உடனே அவருக்கு வால் வெள்ளிகளைப் பற்றி ஒரு நூல் எழுத வேண்டுமென்ற எண்ணம் தோன்றிற்று. அவர்கண்ட வெள்ளி முன் கி. பி. 1680-ல் தோன்றியது. அவர்தாம் எழுதிய ஆராய்ச்சிநூலில் அவ்வெள்ளி மறுபடி 1759-ல் தோன்றுமெனக் குறிசொல்லியிருக்கிருர். அவர் அறிவித்தபடியே அவ்வால்வெள்ளி கி. பி. 1759-ல் தோன்றிற்று. அவர் தாம் கிரீனிச்சிலிருந்த ஒன்பது யாண்டுகளில் ஆயிரத்தறுநூறு காட்சிகளைக் கண்டு ஆராய்ச்சி செய்தார். அப்பெரியார் அக்காலத்தில் ஐரோப்பாவி லிருந்து வானநூற் புலவர்கள் அனைவரையும் நேரிலும் எழுத்து மூலவாகவும் அறிந்து பழகியிருந்தார். அவர் 1742-ல் தமது எண்பத்தாருவது வயதில் இறந்தனர்.

அவருக்குப்பின் தலைவரானவர் டாக்டர் பிரேஅட்லி (Dr Bradley) என்பவர். அவர் இரண்டு பெரிய உண்மைகளைக் கண்டு பிடித்தார். அவையாவன:—ஒளியின் நிலைமாறித் தோன்றும் தன்மை (aberration of light) யும், பூமி உருவணி (Earth's axis) யின் அசைவும் ஆம். அசையாத விண்மீன்களுக்கு ஏதாவது நிலைமாற்றம் உண்டா எனக் கண்டுபிடிப்பதற்கு எண்ணற்ற ஆராய்ச்சிகளைச் செய்தார். அவர் 1762-ல் மடிந்தார்.

இதன் நடுவில் கி. பி. 1642 டிசம்பர் மாதம் 25உ இங்கிலாந்தின் லின்கான் மாகாணத்தில் உல்ஸ்ட்ரோப் (Woolstrope) என்ற நகரில் உலகப் புகழ் பெற்ற ஓர் புலவர் தோன்றினர். அவரே சர் ஐசக் நியூட்டன் (Sir. Isaac Newton) என்பார். ஒளி

நூல் வளர்ச்சிக்கு முன் நின்றது போலவே அவர் கணிதத்திலும் இயற்கைச் சித்தாந்த (Natural philosophy) த்திலும் அரிய ஆராய்ச்சிகள் செய்து முதன்மைபெற்று விளங்கினர். அவர் பூநடுக்கவர்ச்சி (Gravitation) யைக் கண்டுபிடித்ததானது அது வரை காரணம் கூற முடியாதிருந்த பல உண்மை நிகழ்ச்சிகளுக்குத் தக்க காரணம் கூற ஏதுவாயிற்று. அவர் இயற்றிய ஒப்பற்ற பிரின்சிபியா (Principia) என்ற நூல் 1686-ல் வெளிவந்தது. அவர் கண்ட உண்மைகள் எண்ணிறந்தன. கோபர்நிக்கஸ் என்பவரால் புதுப்பிக்கப்பெற்று இப்போது வழங்கிவரும் இரவி வரிசைமுறை (Solar System) நியூட்டனுடைய முறையையே பின்பற்றியதாக இருக்கிறது.

நியூட்டனுக்குப்பின் பல புகழ்பெற்ற புலவர்கள் இருந்தார்கள். அவர்களில் முதன்மையானவர் டாக்டர் ஹெர்ஷெல் (Dr. Herschel) என்பவர். அவர் கி. பி. 1781 செப்டம்பர் மாதம் 13உ ஜியார்ஜியம் சைடஸ் (Georgium Sidus) என்ற கிரகத்தைக் கண்டுபிடித்தார். 1787-ம் ஆண்டில் அக்கோளைச் சுற்றிவரும் இரண்டு மதிகளை (Satellites) அவர் கண்டார்; பின் அவர் 1790-ல் ஒன்றும், 1794-ல் ஒன்றுமாக வேறு இரண்டு மதிகள் அதனைச் சுற்றி வருவதைத் தமது ஆராய்ச்சியால் அறிந்து வெளிப்படுத்தினர். இம் முடிபுகள் ஒளிநூல் உலகத்தில் ஒரு புத்துணர்ச்சியைத் தோற்றுவித்தன.

அரசாங்க ஒளி நூற்புலவராக இருந்த டாக்டர் மேஅஸ்கலேன் (Dr. Maskelyne) என்பவர் மிகப் புகழ்பெற்று விளங்கினர். அவரே நாவிகர் பஞ்சாங்கம் (Nautical Almanac) என்பதை வெளிப்படுத்துமாறு தூண்டியவர். (நாவிகர் - கப்பலோட்டிகள்). இப்பஞ்சாங்கம் கி. பி. 1767-ல் முதன் முதலாகத் தொடங்கப்பெற்று ஆண்டுதோறும் இன்றுவரை வெளிவந்துகொண்டிருக்கிறது. இஃது உலகத்திற்கு ஓர் பேருதவியாகி, கப்பலோட்டிகளுக்கு ஒப்பற்ற தோழனாகத் துணைபுரிகின்றது. (தொடரும்)

"செல்வியைப் போற்றுவார்
செந்தமிழை வளர்ப்பார்."

மொழிபெயர்ப்பு-Translation

[திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் M.A., B.L.]

கபிலர்

இயற்றிய

இன்னா நாற்பது

Of Unpleasant Things : Forty (Stanzas)

By

KAPILAR

(முன் கஅகூ-ம் பக்கத் தொடர்ச்சி)

கஉ. உடம்பா டிலாத மனைவிதோ ளின்னா
இடனில் சிறியாரோ டியாத்தநண் பின்னா
இடங்கழி யாளர் தொடர்பின்னா வின்னா
கடனுடையார் காணப் புகல்.

12. A disagreeing wife is unpleasant; friendship with the un-intellectual is unpleasant; association with those who delight in drink forgetting it is poison, is unpleasant; unpleasant for debtors to go before their creditors.

கந. தலைதண்ட மாகச் சுரம்போத லின்னா
வலைசுமந் துண்பான் பெருமித மின்னா
புலையுள்ளி வாழ்த லுயிர்க்கின்னா வின்னா
முலையில்லாள் பெண்மை விழைவு.

13. To go into a wilderness at the risk of one's head is unpleasant; the pride of the fisherman who has to carry a net is unpleasant; meat-eating is unpleasant to many creatures, (that are killed for meat); unpleasant the femininity of a woman without breasts.

கச. மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்த லின்னா
துணிவில்லார் சொல்லுந் தறுகண்மை யின்னா
பணியாத மன்னர்ப் பணிவின்னா வின்னா
பிணியன்னார் வாழு மனை.

14. It is unpleasant for a king to ride on an elephant that has no bells, to announce his approach; unpleasant are the courageous words of cowards; the yielding of unyielding kings is unpleasant; unpleasant the house where the women are as troublesome as disease.

கரு. வணரொலி யைம்பாலார் வஞ்சித்த லின்னா
துணர்தூங்கு மாவின் படுபழ மின்னா
புணர்பாவை யன்னார் பிரிவின்னா வின்னா
உணர்வா ருணராக் கடை.

15. It is unpleasant to be cheated by women whose curly and radiant locks are tied up in five different ways; unpleasant is the fruit that has fallen on the ground from the hanging bunch of the mango; unpleasant is separation from woman beautiful as a statue; unpleasant when those who are intelligent do not understand.

கசு. புல்லார் புரவி மணியின்றி யூர்வின்னா
கல்லா ருரைக்குங் கருமப் பொருளின்னா
இல்லாதார் நல்ல விருப்பின்னா வாங்கின்னா
பல்லாரு ணாணப் படல்.

16. Unpleasant to ride on the grass-eating horse without sounding bells; unpleasant the meaning of things as set forth by the ignorant; unpleasant for beggars to wish for costly things; unpleasant the shyness which prevents speech before a large audience.

கஎ. உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா
கண்ணி லொருவன் வனப்பின்னா வாங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு.

17. Unpleasant is the large fortune amassed by starving oneself; association with enemies is very unpleasant; the beauty of a blind man is unpleasant; unpleasant the accounts cast by one who is ignorant of numbers.

கஅ. ஆன்றவிந்த சான்றோருட் பேதை புகலின்னா
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா வாங்கின்னா
ஈன்றாளை யோம்பா விடல்.

18. It is unpleasant for a fool to go into the company of the earned; very unpleasant to go forth on a journey when the sky gets dark; unpleasant the penance of those who are not accustomed to endurance; very unpleasant not to protect one's own mother.

ககூ. உரனுடையா னுள்ள மடிந்திருத்த லின்னா
மறனுடை யாளுடையான் மார்பார்த்த லின்னா
சுரமரிய கானஞ் செலவின்னா வின்னா
மனவறி யாளர் தொடர்பு.

19. Unpleasant it is if an intelligent man's mind lies fallow; it is unpleasant if one who has others to fight for him, himself goes forth and taps his chest in challenge; unpleasant to travel in forests and deserts; unpleasant the frienship of those that don't understand you.

உ0. குலத்துப் பிறந்தவன் கல்லாமை யின்னா
நிலத்திட்ட நல்வித்து நாறாமை யின்னா
நலத்தகையார் நாணாமை யின்னாவாங் கின்னா
கலத்தல் குலமில் வழி.

20. It is unpleasant for one born in a good family not to be educated; unpleasant is the sown seed that does not sprout; it is unpleasant for good people not to be ashamed of doing harm; unpleasant too is an alliance with those who are not born in a good family.

உக. மாரிநாட் கூவுங் குயிலின் குரலின்னா
வீர மிலாளர் கடுமொழிக் கூற்றின்னா
மாரிவளம்பொய்ப்பி னூர்க்கின்னா வாங்கின்னா
மூரி யெருத்தா லுழவு.

21. Unpleasant is the voice of the Koel in winter; the harsh words of the unloving are unpleasant; unpleasant are clouds that do not pour down rain; unpleasant too, ploughing with an old buffalo.

உஉ. ஈத்த வகையா லுவவாதார்க் கீப்பின்னா
பாத்துண லில்லா ருழைச்சென் றுணலின்னா
மூத்த விடத்துப் பிணியின்னா வாங்கின்னா
ஓத்திலாப் பார்ப்பா னுரை.

22. It is unpleasant to give to those who are not satisfied with what is given; unpleasant to go as a guest to those who are no hospitable; unpleasant is disease in old age; unpleasant are the words of a Brahmin who has not studied the Vedas.



கடை மருந்துகளைப் பயன்படுத்து முறை

அரிசி. (Rice)

("காசிகன்" எழுதுவது)

அரிசி யாவருமறிந்த தொரு பொருள் ; நந்நாட்டு உணவுப் பொருள்களில் பொதுப்படையான சிறந்த தொருபொருள். இப் பொருள் உடல்நலக் கேடுற்ற காலத்து மருந்தாகவும் பயன்படுவ தொன்றாகும்.

குடி நீர்:—

அரிசி குடிநீராகப் பயன்படும். நன்றாகத் தீட்டிக் கழுவிச் சுத்திசெய்த புழுங்கலரிசியைச் சிறிதெடுத்துத் தண்ணீர் விட்டு வேகவைத்து வடிகட்டிக் குடிநீராக அருந்தலாம். காய்ச்சல்களுக்கும் வைசூரி சிச்சிலுப்பை முதலிய அம்மை நோய்களுக்கும் மிகுந்த சூட்டினாலேற்படும் ஏனைய நோய்களுக்கும் இது நலந் தருவதாகும்.

இந் நீருடன் சிறுபுளிப்புத் தரவல்ல எலுமிச்சம்பழச் சாற்றையும், நாட்டுச் சருக்கரையையும் சேர்த்து வேண்டுமானாலும் உட்கொள்ளலாம். நோயாளிகள் நிறைய இக் குடிநீரை உட்கொண்டால் நல்ல பலன் உண்டு.

சிறுநீர் குறைவாகவும் மஞ்சள்நிறமாகவும் போகும் சில சுரங்களுக்கு இந் நீருடன் ஏறக்குறைய அரை ரூபாவெடை வெடியுப்பைக் கலக்கி உட்கொள்ளலாம்.

காய்ச்சலுடன் இருமலும் உள்ள சில நோய்களுக்குக் குடிநீருடன் வெடியுப்புச் சேர்ப்பதோடு குன்றிவேர் என்று சொல்லும் நாட்டு அதிமதுரத்தில் சிறிது தட்டிப்போட்டுக் காய்ச்சிக் கொடுக்கலாம். அவ்வேர் அரிசி வேகுமுன்னர்ப் போடப்படல்வேண்டும்.

அரிசிமா:—

நன்ருகப் பொடித்த பச்சரிசிமாவை வைசூரி பூட்டியவர்களின் தோல்மேல் தூவலாம். மற்றும் மிகுந்த சூட்டினுல் தோலின்மீது காணும் நோய்களுக்கும் இவ்வாறே தூவலாம். மாவைச் சிறிது கனமாகத் தூவினுல் அது குளிர்ச்சியைக் கொடுத்து நோயின் வலியையுங் குறைக்கும். தீயினுற் சுடப்பட்ட புண்ணுக்குக் கூட வேருெரு மருந்துங் கையிலில்லாவிடத்து அரிசிமாவை அடுத்தடுத்து நீர் வடியாதபடியும் மா இளகாதபடியும் தூவிவந்தால் புண்ணில் காற்றுப் படாமல் பார்த்துக்கொள்ளலாம். இம் மாத் தூவல் கெட்டியாகி வலியுண்டானுல் கீழ்வரும் அரிசிமாக் கிளறல் (போல்ட்டிஸ்) வைத்துக் கட்டி இளக்கிக்கொள்ளலாம். அதன் பின் சுண்ணும்பு நீர்த் தயிலமாவது 'மெழுகுப் பிளாஸ்திரி' யாவது இட்டு ஆற்றிக்கொள்ளலாம்.

அரிசிமாக் கிளறல் (Poultice):—

அரிசியைப் பயன்படுத்துவதில் மூன்ருவது வகை கிளறிக் கட்டல் என்பதாகும். அரிசிமாவுடன் கொதிக்கிற வெந்நீரைச் சேர்த்தாவது, தண்ணீரைவிட்டுக் கலக்கிச் சிறு தீயில் வைத்து அடிக்கடி கிளறிவிட்டு இறுகியவுடன் எடுத்தாவது ஒரு துண்டுத் துணியின்மீது கனமாகத் தடவிக் கட்டலாம். பருக்கள், குருதிக் கட்டிகள், (விப்புருதிகள்) சீழ்கொள்ளுகிற காயங்கள் முதலியவற்றிற்கு இவ்வாறு நாடோறும் நாலைந்து தடவை மாற்றிமாற்றி வைத்துக் கட்டுவது நலந் தருவதாகும். வலியும் சூடுமுள்ள பருத்த மூல முளைக்கும் இது பயன்படும் என்று கூறுவர்.

சுடுகாயங்கள் (Burns & Scalds):—

தீப்பட்டாவது கொதிநீர் ஊற்றியதனுலாவது உண்டாகும் புண்களுக்குச் சுண்ணும்புத்தண்ணீரும் நல்லெண்ணெயும் சமனளவு எடுத்துக்கொண்டு அதில் ஒரு சிறுதுண்டுத் துணியை நனைத்துக் கட்டி அடிக்கடி நனைத்தும் துணியை மாற்றியும் வர நல்ல பலனுண்டாகும். இஃதில்லாவிடத்து மையப்பொடித்த அரிசி மாவைத் தூவி வரலாம். புண் சற்று ஆறத் தொடங்கியவுடன் "மெழுகுப் பிளாஸ்திரி" போட்டுக்கொள்ளலாம்.

———

வரலாற்றுப் பகுதி:
History & Biography.

அறிவுநூற் புலவர் (Professor of Philosophy)

ராய்பகதூர் P. சுந்தரம்பிள்ளை (எம்.ஏ.) அவர்கள்

வரலாற்றுச் சுருக்கம்

(முன் கசுள-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்ஙன மிருக்குங்கால், 1882-ம் ஆண்டு இறுதியில், மாட்சிமை மிக்க விசாகந் திருநாள் மகாராஜா அவர்கள் இவரது கல்விப் பெருமையை நன்குணர்ந்து தம் அரண்மனையில் பிறவகை சிரஸ்தார் (Commissioner of Separate Revenue) என்னும் உயர்ந்த வேலையில் இவரை அமர்த்தினர். இவர்தம் பெருங் கல்விக்கும் மனநிலைமைக்கும் மடிமிக்க அவ்வேலை பொருந்தியதாயில்லை. ஆனல் அவ்வேலையில் அமர்ந்திருக்கும்பொழுது இவர் சட்டக்கல்லூரியில் சட்ட நூல் பயின்றுவந்தார். அத்தருணத்தில் அரசர்கல்லூரித்தலைவர்(Principal)(மிஸ்டர்)ராஸ்துரையவர்கள் தாய்நாடு செல்ல நேர்ந்தமையின், அத் தலைமையாசிரியர் பதவியில் டாக்டர் ஹார்வி துரையவர்கள் அமர்ந்தார்கள். டாக்டர் ஹார்வி துரையவர்கள் தாம் முன் பார்த்து வந்த அறிவுநூற் புலவர் வேலைக்குத் தக்கார் சுந்தரம்பிள்ளையவர்களே என்று கண்டு அவரை அவ்வேலையில் 1885-ம் ஆண்டில் அமர்த்தினர். பிள்ளையவர்கள் அக்காலமுதல் தம் இறுதிக்காலம் வரை அப்போசிரியர் வேலையிலேயே யிருந்து, அறிவு நூற்பொருள்களை மாணவர்கட்கு அவாவுண்டாம்படி பெருந்திறமையுடன் கற்பித்து வந்தனர். அவருடைய விரிந்த எண்ணங்களும், நகைச்சுவை தோன்றப் பேசுந்திறனும், யாற்றெழுக்குப்போற் சொற்களமைக்கும் ஆற்றலும், சொல்வன்மையும், இயற்கை நுண்ணறிவும் கல்லூரி யாசிரியர்களாலும், மாணவர்களாலும், ஏனையோராலும் பெரிதும் பாராட்டிப் பேசப்பட்டன.

1884 - ம் ஆண்டு, பிள்ளை யவர்கள், வழக்கறிஞர் சாமிநாத பிள்ளையவர்கள், இசைப் புலவர் திரு. T. இலக்குமணப் பிள்ளையவர்கள் தந்தையார் வலிய மேலெழுத்துத் திரவியம் பிள்ளையவர்கள், (உண்டியல் கடை) சு. கணபதிப் பிள்ளையவர்கள் தந்தையார் சுப்பிரமணிய பிள்ளையவர்கள் முதலியவர்களுடன் சேர்ந்து, சைவசமய விளக்கத்தையும், தமிழ்மொழி வளர்ச்சியையுங் குறியாகக் கொண்டு, 'சைவப் பிரகாச சபை' என்னும் பெயரிய ஒரு சபையை நிறுவி, அதன் வாயிலாகப் பணி செய்து வந்தார்கள். அச் சபைக்கு ஒரு கட்டிடம் அமைப்பதற்கு எல்லோருஞ் சேர்ந்து ஓர் இடம் வாங்கி, அதில் 1885-ம் ஆண்டில் ஒரு கட்டிடமுங் கட்டி முடித்தார்கள். அதற்குச் சுந்தரம் பிள்ளையவர்கள் ரூ. 500 நன்கொடை யளித்திருக்கிறார்கள். அச் சபைக் கட்டிடம் இன்றும் திருவனந்தபுரத்தில் நிலவி விளங்குகின்றது. கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் நடை பெற்றுவந்த பரிசளிப்புகட்கு அவர்கள் நன்கொடை வழங்கி வந்ததாகத் திருவிதாங்கூர் அரசியல் கல்வி யிலாகா அறிக்கைகள் பகருகின்றன. 1886-ம் ஆண்டு, அவர் தந்தையார் பெருமாள் பிள்ளையவர்கள் மண்ணுலகு நீத்து விண்ணுல கெய்தினர்.

பிள்ளையவர்கள் தமிழிலக்கிய வரலாற்றாராய்ச்சியிலும், சமய நூலாராய்ச்சியிலும், திருவிதாங்கூர் பண்டைய அரசர் கால ஆராய்ச்சியிலும் பெரிதும் உழைத்து, அவ்வப் பொருள்கள்பற்றிப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆங்கிலத் திங்கள் இதழ்களில் எழுதி வந்தார்கள். தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும், அறிவு வளர்ச்சிக்காகவும் பிள்ளையவர்கள் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தி யிருக்கின்றார்கள். இதுவுமன்றி, திருவிதாங்கூர் அரசியலாரால் அமைக்கப்பட்ட போதுமக்கள் சோற்பொழிவு சங்கத் (Public Lecture Committee) தில் அமைச்சரா யமர்ந்து, அதிலும் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தி யிருக்கின்றார்கள். பிள்ளையவர்கள் தம் மேனாட்டு அறிவு நூலாராய்ச்சித் திறத்தினாலே, மேனாட்டுப் பெரியாருடைய விழுமிய கருத்துக்களை நமது நாட்டாருக்கும், நம் நாட்டு அறிவு நூலாராய்ச்சித் திறத்தினாலே நம் நாட்டு முன்னோருடைய சிறந்த கருத்துக்களை மேனாட்டுஅறிஞர்கட்கும் அறிவுறுத்தக்காரணராயிருந்திருக்கிறார்கள்.இவரெழுதிய நூற்றொகைவிளக்கம்,1888-ம் ஆண்டு மேத் திங்கள் அச்சியற்றி வெளியிடப்பட்டது. அந் நூல் முக

வுரையில் ஆசிரியரவர்கள் கீழ்வருமாறு கூறியிருக்கிறார்கள்: 'தற்கால நிலைமைக்கேற்பச் சாத்திரங்களை எத்தனை வகுப்பாய் வகுக்கலாமென்பதும், அவற்றின் முக்கிய முறைமையும் பொருளும் என்னவென்பதும் ஆம்வகை எடுத்து விளக்குவதே இந் நூல் பொதுவியலின் தலைமையான உத்தேசம். இது திருவிதாங் கோட்டு கவர்ன்மெண்டாருடைய நூதன பிரசங்க ஏற்பாட்டின் படி திருவனந்தபுரம் சர்வகலாசாலையில் வாசிக்கப்பட்டது' என்பதாகும். தமிழ் உரைநடை நூலுக்கு இஃது ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

இந் 'நூற்றொகை விளக்கம்' வெளிவந்த மூன்றாவதாண்டாகிய 1891-ம் ஆண்டு மார்ச்சுத்திங்களில், மனோன்மணீயம் வெளிவரலாயிற்று. அக்காலத்தில் வெளிவந்த தமிழ்நூல்களில் மனோன்மணீயம்' முன் அணியில் வைக்குந் தகுதியுடைய தென்பதற்கு (Rev. Dr. G. U. Pope M.A., D.D.) டாக்டர் ஜி. யு. போப் துரையவர்கள், ஆசிரியர் P. அரங்கநாத முதலியாரவர்கள் M.A., சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் B.A, B.L. முதலானவர்கள் தந்த மதிப்புரைகளே தக்க சான்றாகும். இக்காலத்தில், பிள்ளையவர்கள் (Madras Christian College Magazine) சென்னைக் கிறித்துவ கலாசாலைத் திங்கள் இதழில் பத்துப்பாட்டு என்னும் பொருள்பற்றியும், ஞானசம்பந்தர் காலவாராய்ச்சி (The Age of Gnanasambandar) என்னும் பொருள் பற்றியும், ஆங்கிலத்திற் சில கட்டுரைகள் எழுதி வந்திருக்கிறார்கள். பின் 1894-ம் ஆண்டில், திருவிதாங்கூர் பண்டைமன்னர் காலவாராய்ச்சிக் கட்டுரைகளும் மேற்குறித்த திங்கள் இதழில் வெளியிடப்பட்டுப் பின் புத்தக உருவிலும் வெளிவந்தன. 1895-ம் ஆண்டில் திருஞானசம்பந்தர் காலவாராய்ச்சியும் புத்தக வடிவில் வெளிவந்தது. பிள்ளையவர்கள் செய்த ஞானசம்பந்தர் கால வரையறை, பின்னால் அதனைப்பற்றிப் பலரால் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளால் வலுப்பட்டதேயன்றி, ஒருசிறிதும் மாறுதலடையாதிருந்தது பிள்ளையவர்களின் ஆராய்ச்சித் திறனுக்குச் சான்றாகும். இந்தியாவிலும், மேனாட்டிலும் மேற்குறித்த இரு ஆங்கில நூல்களையும் கற்ற அறிஞர்கள் அவைகளின் மேன்மைகண்டு புகழ்ந்து பாராட்டி எழுதியிருக்கிறார்கள். இந்நூல்களின் வழியாக அவர்களெல்லாரும் இவர்தம் நட்பிற்கு உரிய

ராணுர்கள். இவர் கல்வித் திறமையினை யறிந்த ஜெர்மனியிலுள்ள ஒரு பல்கலைக்கழகத்தார் (Gottingham University) இவர் ஆறு திங்கள் அங்குப் போந்து அக் கலாசாலையில் தங்கியிருப்பாராயின் அறிவுநூற் பெரும்புலவர் (Doctor of Philosophy) என்ற பெரும் பட்டம் வழங்குவதாக வாக்களித்ததனாலேயே இவர்பால் மேற்கு நாட்டார் கொண்டிருந்த நன்மதிப்பு தெள்ளிதிற் புலனாம்.

சர் எம். இ. கிராண்ட் டப் (Sir M. E. Grant Duff என்ற சென்னை மாகாண அரசியற் றலைவர் (Governor of Madras) அவர்கள் தூண்டுதலின்மேல் இலண்டனிலுள்ள வரலாற்றுராய்ச்சிக் கழகத்தார் (Royal Historical Society) இவருக்கு F.R.H.S. என்னும் பட்டத்தையும், ஆசியாத் தொடர்பான ஆராய்ச்சிக் கழகத்தார் (Royal Asiatic Society) M.R.A.S. என்னும் பட்டத்தையும் வழங்கி இவரைப் பெருமைப்படுத்தினர். இவர் செய்த தென்னிந்திய வரலாற்றுராய்ச்சியின் திறமையைக் கண்ட சென்னை அரசியலார், 1896-ம் ஆண்டில் 'ராய்பகதூர்'' என்னும் பட்டத்தை இவருக்கு அளித்தனர். 1891-ம் ஆண்டில் இவரைச் சென்னைப் பல்கலைக்கழகத்தார் பல்கலைக் கழக உறுப்பின (F.M.U.) ராக அமைத்துக்கொண்டனர். அதுமுதல் இவரைப் பல்கலைக் கழகத்தார் பல ஆண்டுகளில் தமிழ் (Tamil), வரலாறு (History), அறிவுநூல் (Philosophy) இவைகட்குத் தேர்வாளராக அமைத்துச் சிறப்பெய்துவித்தனர். திருவிதாங்கூர் பண்டை யரசர் கால வாராய்ச்சி எழுதும்பொருட்டுப் பிள்ளையவர்கள் எடுத்துக்கொண்ட பேருழைப்பை நன்குணர்ந்த மாட்சிமிக்க திருவிதாங்கூர் அரசர் பெருமான் அக்கால முதற்கொண்டே பிள்ளையவர்களின் ஒரே புதல்வரான திருவாளர் நடராஜ பிள்ளை அவர்கட்குத் திங்கள்தோறும் ரூபாய் இருபது நன்கொடையாக அளித்துவருகிறுர்கள்.

* சுந்தரம்பிள்ளையவர்கள், தம் இளமைக் காலத்தில், நாகபட்டினம் இயற்றமிழ் ஆசிரியராகிய, புத்தகக்கடை திருவாளர் நாராணயசாமிப் பிள்ளை அவர்களிடந் தமிழ்க் கல்வி பயின்றவர்கள். நாகை R. S. வேதாசலம்பிள்ளை (இப்பொழுது சுவாமி

*மறைத்திரு சுவாமி வேதாசலம் அவர்கள் எழுதிய சிந்தனைக் கட்டுரையினின்றும் எடுக்கப்பட்டது.

வேதாசலம் என்னும் மறைமலையடிகள்) அவர்களும் அவ்வாசிரிய ரிடத்தே தம் இளமைக் காலத்தில் தமிழ்க் கல்வி பயின்றவர்கள். சுந்தரம்பிள்ளையவர்களியற்றிய 'மனோன்மணீயம்' என்னும் நாடகக் காப்பியத்தை, திருவாளர் வேதாசலம்பிள்ளை யவர்கள் கண்ணுற்று, சுந்தரம் பிள்ளையவர்கட்குத் தம்மைப்பற்றியும் தம் ஆசிரியர் நாராயணசாமிப் பிள்ளையவர்களைப் பற்றியும் 1895-ம் ஆண்டில் ஒருகடிதம் அகவற் பாவில் வரைந்து விடுத்தார்கள். அதனைக் கண்டு இறும்பூதுற்ற சுந்தரம் பிள்ளை யவர்கள் ஆசிரியர் நாராயணசாமிப்பிள்ளை யவர்களையும், திருவாளர் வேதாசலம் பிள்ளை யவர்களையும் திருவனந்தபுரத்திற்குத் தம்பால் வரும்படி விரும்பி யழைத்தனர். அவ்வழைப்பினுக்கு மிக மகிழ்ந்து திருவாளர் வேதாசலம்பிள்ளை யவர்கள் தம் ஆசிரியருடன் 1895-ம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இறுதியில் திருவனந்தபுரத்துக்குச் சென்று சுந்தரம் பிள்ளையவர்களைக் கண்டார்கள். சுந்தரம் பிள்ளையவர்கள், திருவாளர் வேதாசலம் பிள்ளையவர்கள் அகவற்பாவில் எழுதிய கடிதத்தைக் கண்டு அவர்களை ஆண்டில் முதியாரகவே எண்ணியிருந்தனர். ஆனால் திருவாளர் வேதாசலம்பிள்ளை யவர்கள் மிக இளைஞரா யிருத்தலைச் சுந்தரம் பிள்ளையவர்கள் நேரிற் கண்ட அளவானே பெரிதும் வியப்புற்றுத் தாம் முன் எண்ணியதனை அவரிடங் கூறினார்கள். சிலநாள் சுந்தரம் பிள்ளை யவர்கள் திருவாளர் வேதாசலம்பிள்ளை யவர்களோடு நட்பினால் அளவளாவி யிருக்கையில், அவர்கள் பழைய சங்கத் தமிழிலக்கண இலக்கியங்களிலும் பழந் தமிழ்க் காப்பியங்களிலும் வல்லுநராயிருத்தலை ஆராய்ந்து பார்த்து, அவர்களின் அறிவின் நுட்பத்திற்கும், நிறைந்த கல்விக்கும், சிறந்த ஆராய்ச்சிக்கும், அவர்களை மிக வியந்து பாராட்டி அதற்கு அடையாளமாக ஒரு நற்சான்று இதழும் எழுதித் தந்தனர். திரும்பவும் 1896-ம் ஆண்டில், சுந்தரம் பிள்ளை யவர்கள், திருவாளர் வேதாசலம் பிள்ளை யவர்களைத் திருவனந்தபுரத்துக்கு அழைத்து, அப்போது மார்த்தாண்டன் தம்பி என்பவரால் வைத்து நடத்தப்பட்ட ஓர் ஆங்கிலக் கல்விச்சாலையில் அவரைத் தமிழாசிரியராக அமர்த்தி வைத்தார்கள். திருவாளர் வேதாசலம்பிள்ளை யவர்கள் திருவனந்தபுரத்திலிருந்த இரண்டரைத் திங்களுக்கிடையில், செப்டம்பர் 12ம் நாள், திருவனந்த

புரம் அரசர் கல்லூரியில் சுந்தரம்பிள்ளையவர்கள் வேண்டுகோட் கிணங்கி அவர்கள் தலைமையின்கீழ் "நாடகத் தமிழ்" என்னும் சிறந்த பொருளைப்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினர். அவ் விரிவுரையின் சிறந்த அறிவாராய்ச்சி நுட்பங்களைச் சுந்தரம் பிள்ளையவர்கள் மிகவும் வியந்து பேசினர். அதன்பின், திருவாளர் வேதாசலம்பிள்ளை அவர்கள் தம் இருபதாம் ஆண்டிற் சுந்தரம் பிள்ளையவர்களிடமிருந்து பரிசுபெற்று நாகை மீண்டனர். சுந்தரம்பிள்ளையவர்கள் அளித்த நற்சான்றிதழே திருவாளர். வேதாசலம்பிள்ளை யவர்கட்கு அக்காலத்தில் கிறித்தவ கலாசாலைத் தமிழாசிரிய வேலையைப் பெறப் பெருந்துணை புரிந்தது.

சுந்தரம்பிள்ளை யவர்கள் தமது பிள்ளைமைக்காலத்திலேயே மிகுந்த கடவுட் பற்றுடையவர். ஆதலால், இவர் நாடோறும் புலரிக்காலையில் பிள்ளையார் பெருமானுக்கு வழிபாடு செய்தே பள்ளிக்குச் செல்வர். பள்ளியிலும், இவர் அங்கிருந்த பிள்ளையார் பெருமானுக்கு அன்புடன் வழிபாடு செய்தபின்பே கல்வி கற்கத் தொடங்குவது வழக்கம். இன்னும் இவர், தம் இளமைக்காலத்திருந்தே கடவுட் பற்றிலும், தாய்மொழிக் கல்வியிலும், ஆடம்பரமில்லா வாழ்க்கையிலும் பற்றுடையவராய் வளர்க்கப்பட்டு வந்தாராதலின், ஆங்கிலக் கல்வியில் ஒப்பற்ற பெரும்புலவராய காலத்தும், தம் சமயக் கொள்கையையும், தாய்மொழிக் கல்வியையும் ஒரு சிறிதும் மறவாது அவைகளின் முன்னேற்றத்திற்காகத் தம் இறுதிக்காலம்வரைப் பெரும்பாடு பட்டனர். இவர் வீண் ஆரவாரமான செலவுகள் செய்யமாட்டார். ஆனால், கல்வி கற்பதிற் பெருவிருப்பும் பேரவாவுமுடைய ஏழை மாணவர் எவர்க்கும் இவர் பொருளுதவி செய்வர். அவ்வாறு சிலர்க்குப் பெரும்புலமைப் பட்டம் எய்தும்வரைப் பொருளுதவி புரிந்துவந் திருக்கின்றனர். பொதுவாக இவர், மக்களைப் பொருட் செல்வ நிலையுன்னி மதிப்பவரல்லர். செல்வராயினும் எளியவராயினும் அவரவரிடத்துக் காணப்படும் திருவருள் விளக்கத்தையும் நற்பண்புகளையுமே பாராட்டும் இயல்பினர். இவர் நாடோறும் பத்து அல்லது பன்னிரண்டு மணி நேரத்திற்குக் குறையாமல் உழைக்கும் இயல்பினர். கல்லூரிப் பேராசிரிய வேலையோடு அறிவுநூலாராய்ச்சி, தென்னிந்திய வரலாற்றாராய்ச்சி, கல்வெட்டாராய்ச்சி முதலியவை

களிற் றம் காலத்தைப் பொதுநலத்துக்குப் பயன்படக் கழித்து வந்தனர். இவர் ஆண்டுதோறும் வரும் கோடைவிடுமுறை காலங்களில் பெரும்பாலும் பாடல்பெற்ற திருக்கோயில்களுக்குச் சென்று கடவுளை வழிபடுவர். இதுவுமன்றி அக்கோயிற் சுவர்களில் எழுதப்பட்டிருக்கும் கல்வெட்டுக்களையும் ஆராய்ச்சி செய்தே திரும்புவர்.

இத்தகைய பேருழைப்புமிக்க பிள்ளையவர்கள் நாளடைவில் உழைப்பின் காரணத்தால் உடல்வலிமை குன்றியே வந்தார். அதன் பின்னர் நோய்மிகுதியால் திடீரெனத் தமது இளமைக் காலமாகிய 42-ம் ஆண்டிலேயே (அதாவது 1897-ம் ஆண்டு ஏப்ரல் 26-ம் நாள், கொல்லம் ஆண்டு 1072 சித்திரை 14 ம் நாள்) திங்கட் கிழமை காலை 8 மணிக்கு நவமி திதியில் பெரும்புலவரான சுந்தரம் பிள்ளையவர்கள் இம்மண்ணுலக வாழ்வை நீத்து என்றுமழியா விண்ணுலக வாழ் வெய்தினர்.

இவர் தமது 23-வது ஆண்டில், கோடகநல்லூர் உயர்திரு. சுந்தர சுவாமிகளை நட்புக்கொண்டதுமுதல் காலையில் முழுகி, தேவார முதலிய தமிழ்மறைகள் ஓதி வழிபாடு செய்தபின்னரே உணவருந்தி வேலைமேற் செல்வது வழக்கம். இவ்வழக்கத்தை அவர் தமது இறுதிக்காலம்வரை கைநெகிழ விடவில்லை. மேனாட்டு அறிவுநூற் பயிற்சியும் நாகரிகமும் அவர்களுடைய கடவுட்பற்றையும் மொழிப்பற்றையும் நல்லொழுக்கத்தையும் வலுப்படுத்தியனவேயன்றிச் சிறிதுங் குறைக்கவில்லை. இவர் எவர்க்குங் காட்சிக் கெளியராய், அவரவர்க்குத் தம்மால் இயன்ற உதவி செய்துவரும் எளிமையும் விழுமையும் செழுமையும் உடைய வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

இவர் தமக்கு எத்தகைய சிறு நன்றி செய்தாரையும் மறவாது நன்றி பாராட்டும் இயல்புடையவர். தமக்கு உதவிபுரிந்த தம் ஆங்கில அறிவு நூற்புலவர் டாக்டர் ஹார்வி துரையவர்கட்கு நன்றி பாராட்டும் அறிகுறியாகத் தாம் குடியிருந்துவந்த மனைத் தோட்டத்திற்கு இவர் ஹார்விபுரம் என்று பெயரிட்டு வழங்கினர். அப்பெயர் இன்றும் நிலவிவருகிறது. இதுவுமன்றி, தாமியற்றிய 'மனோன்மணீயத்தை'த் தம் ஆசிரியர் ஹார்விதுரையவர்கட்கே உரிமைப்படுத்தி வெளியிட்டிருக்கிறார்.

'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற முதுமொழிக்கு இணங்க இவர் தம் வாழ்நாள்முழுமையுங் கழித்து வந்தனர். வாழ்க்கையின் வெற்றியானது மிக்க பொருள் தேடி ஆடம்பரமாய் வாழ்தலினுலாவதன்று; கடவுட் பற்றுடன் நல்லறிவு, நல்லொழுக்கம், பிறர்க்குப் பயன்பட வாழ்தலாகிய இவைகளாலேயே ஆவது. பிள்ளையவர்களுடைய இத்தகைய வெற்றி வாழ்க்கைக்கு அவர்களுடைய கடவுட்பற்றே காரணமாயிருந்தது. உலகத்தினுடைய முன்னேற்றமானது பிள்ளையவர்களைப் போன்ற பெரியார்களுடைய சிறந்த வாழ்க்கையின் பயனாலேயே யுண்டாகின்றது. இவர் வரலாறு அதனைக் கற்கிறவர்களுக்கு இவர்தம் வாழ்க்கையைப்போன்ற தூயவாழ்க்கையை நடத்த வழிகாட்டியாயிருக்குமென்பது திண்ணம். இப்பெரியாருடைய உலக வாழ்க்கை நலம் எல்லாம்வல்ல இறைவனருளால் இந்நூலைக் கற்கும் மாணவர் கட்கும் பிறர்க்கும் உண்டாவதாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உஞற்றுபவரும் உஞற்றிலவரும்

உஞற்றுபவர்.

க. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர். (குறள்-620)

உ. சூழாமல் தானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு. (குறள்-1024)

க. கருதியதை முடிக்க அயர்வின்றி மேன்மேலும் முயல்கின்றவர் வலிமிக்க விதியினையும் புறங்காண்பர்.

உ. தமது குடி சிறப்படைதற்குரிய முயற்சியை விடாது முயல்கின்றவர்கட்கு, அஃது எதிர்பாராதவண்ணம் முடிவுபெறும்.

உஞற்றிலவர்.

க. இடிபுரிந்து எள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர். (குறள்-607)

உ. குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு. (குறள்-604)

க. சோம்பலில் மூழ்கிக்கிடப்பவர் பிறரால் மிகவும் கடுமையாக இகழ்ந்துரைக்குஞ் சொல்லைக் கேட்பர்.

உ. சோம்பலில் மூழ்கி முயற்சி செய்யாதவருடைய குடியுங் கெட்டுக் குற்றமும் பல்கிப் பெருகும்.

—வ. சுப்பையா பிள்ளை.

மாணவர் பகுதி

கல்வியும் நூல்நிலையமும்

(திரு. நாகை. த. குமாரசாமி அவர்கள்.)

கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றலாம். கல் என்னும் பகுதி தோண்டு எனப் பொருள்படும். மக்கட் கமைந்த அறிவு இறைவன் அறிவு போலத் தூயதா யிராமல், ஆணவ இருளிற் புதைந்து கிடப்பது. அவ்விருட் படலத்தைச் சிறிது சிறிதாகக் கல்வி எடுத்து அகற்றுவதே கல்வி யெனலாம். அவ்விருள் குறையக் குறைய, இறைவன் திருவருட் சாயலால் மக்களினுள்ளே மறைந்து கிடந்த அறிவு வெளிப்பட்டுத் தோன்றும். இதுபற்றித்தான் ஆசிரியர் திருவள்ளுவரும்,

> "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறு மறிவு"

என்றார்.

கல்வி, அறிவுநூற் கல்வி யென்றும், உலகநூற் கல்வி யென்றும் இருவகைப்படும். அவற்றுள் அறிவுநூற் கல்வி, மெய்யுணர்தற்குக் கருவியாய் வீடு பயப்பது. உலகநூற் கல்வி, அவ்வவர் தொழிலுக் கேற்பப் பலதிறப்பட்டு, இம்மையில் மிகவும் பயன்படுவதாகும். ஆகவே இவ்விருதிறக் கல்வி நூல்களையும் மக்கள் கற்று அறிவு நிரம்பப் பெற்று இம்மை மறுமைப் பயன்களை எய்த வேண்டுமல்லவா?

தங்கள் வாணாளை வீணாளாக்காமல் பயன் படுத்தவேண்டுமானால், மக்கள் அறிவுடையவர்களாக வேண்டும். அறிவு முதிர்ச்சியடை வடைய நாகரிகம் மேன்மையுறும். நாகரிகமுண்டானால், மக்கள் தங்களுக் கெனமட்டும் வாழாது, பிறர்க்கும் பயன்பட்டு, ஒழுக்கத்திற் சிறந்து, பொய் பொறாமை முதலிய கொடிய பேய்களுக்குத் தப்பி, அன்பும் கருணையும் உடையவர்களாய், நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையை நிலையுள்ளதென மயங்கிக் கண்டதே காட்சி கொண்டதே கோலமெனத் திரியாமல், இறைவன் திரு

வருட் குறிப்புக் கிணங்க நடந்து, பேரும் புகழும் பெருவாழ்வும் பெற்று நன்மை அடைவார்கள் அன்ருே?

இங்ஙனம் வாழ்க்கைக்கு இன்றியமையாத அறிவைப் பெறு தற்குக் கல்வியைவிடச் சிறந்தவழி வேறென்றில்லை. கல்வியின் பெருமையை எடுத்துக் கூறவந்த குமரகுருபர சுவாமிகள்.

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்;
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும்; கல்வியுனூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை."

என்று சுருங்கக்கூறி, விளங்க வைத்தார்கள். கல்வியாகிய கட லுக்குக் கரையில்லை. நம்முடைய வாழ்நாளோ, மிகவும் குறு கியது. அற்ப ஆயுள் பெற்ற மனிதன், உறக்கத்திலும் உண் டாட்டுக் களியாட்டங்களிலும் தன் ஆயுளில் அரைப்பங்கை இழந்துபோகிறுன். எஞ்சிய அரைப்பகுதியில் ஏதாவது பயன் அடையவேண்டுமானல் கல்வியே சிறந்தவழியாகும். தக்க நூல்களைக் கற்று அந் நூல்கள் கூறிய நெறியானே அறஞ் செய்து, பொருள்சேர்த்து, இன்பம் நுகர்ந்து, இறைவனடி மறவாது ஒழுகிவரல் வேண்டும்.

வாழ்க்கைக்கு இன்றியமையாதது அறிவு. அவ்வறிவு பெறுதற்குப் பெருந்துணையாய் நிற்பது கல்வி, அக் கல்வியை ஆசிரியர் மாட்டும், தாமே பல நூல்களைக் கற்றலாலும் பெற லாம். ஆசிரியரைக் கொண்டே எல்லாநூல்களையும் கற்க வேண்டும் என்பதில்லை. அப்படிக் கற்பதும் இயலாததாகும். கல்வியின் சிறப்பையும், அதன் இன்பத்தையும், அதனல் பெறும் பயனையும், அதைக் கற்கவேண்டிய வழிகளையும் ஆசிரியர் தம்முடைய அனுபவத்தின் பயனல் எடுத்துக்காட்டுவர். ஆசிரி யர் அன்புடன் காட்டிய வழியைப் பின்பற்றிக் கல்வி கற் பதுதான் மாணவர் கடமை. ஆசிரியர் கற்பித்ததன் துணை கொண்டு பின்னுங் கற்றற்குரியவற்றை மாணவர் தாமே கற் பதற்குச் சாதகமாய் அமைந்த இடமே நூல்நிலையமாகும்.

(தொடரும்)

இந்திய மருத்துவக் கல்லூரி
சித்தவைத்திய ஆசிரியர்
வைத்தியரத்தினம் C. S. முருகேச முதலியாரவர்கள்

(முகப்புப் படம் பார்க்க.)

இவர் 1871-ம் ஆண்டு ஜூலைத்திங்கள் 20-ம் நாள் பொன்னேரி உயர் துளுவ வேளாள குலத்தில் பிறந்தவர். இவர் சென்னை, திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில் படித்து, சென்னை சர்வகலாசாலை நுழைவுத் (Matriculation) தேர்வில் தேரியபின் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் காலேஜ் வகுப்பில் சேர்ந்தார். சேர்ந்து, எப். ஏ. வகுப்பில் இரண்டு ஆண்டுக்குரிய பாடங்களை முடித்த பிறகு 1893-ம் ஆண்டில் அரசாங்க அலுவலில் அமர்ந்தார். இங்ஙனம் இவர் அரசாங்க அலுவலில் இருக்கும்போதே இவருக்கு அரசாங்க அலுவலைப்பார்க்கிலும், பிணிப்பட்ட ஏழைமக்கட்கு மருத்துவஞ்செய்து நோய் நீக்குதலே சிறந்த கடமையாகத் தோற்றிற்று. இதற்குக் காரணம் இவர்களின் முன்னோர்களுக்குச் சித்தவைத்தியத்தில் மிகுந்த ஆற்றலிருந்ததேயாம். இவர் இளமை முதல் சித்த மருத்துவர்களிடத்திலும், யோகிகளிடத்திலும், முனிவர்களிடத்திலும் மிகுந்த பணிவும் அன்பும் காட்டி அவர்களிடமிருந்து அரிய மருந்து செய்முறைகளைக் கற்றுக் கொண்டார். 1911-ம் ஆண்டில் இவர் அரசாங்க அலுவலினின்றும் விடுதி பெற்றுத் தம் முழு நேரத்தையும் சித்தவைத்தியத்திலேயே செலவழித்து வந்தார். இவர் ஆயுள்வேதவைத்தியம், யூனானி வைத்தியம் ஆகிய இவைகளையும் நன்கு போற்றிவந்தார். பின் சித்தவைத்தியத்தைஅறவே ஒழிக்க வேண்டுமென்று ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கி, இவர் சென்னையில் பல இடங்களில் பெருங் கூட்டங்களைக் கூட்டிச் சித்தவைத்தியத்தின் அருமை பெருமைகளை நன்கு எடுத்து விளக்கி நிலைநாட்டினர். இந்நேரத்தில் இந்திய வைத்தியத்தை ஆதரிக்க வேண்டுமென்ற கிளர்ச்சி தலைகாட்டியது. அதற்காக அரசாங்கத்தினர் ஒரு கமிட்டியை ஏற்படுத்தினர். இந்தக் கமிட்டி ஏற்படுவதற்கு 30 ஆண்டுகட்கு முன்னிருந்தே சென்னையில் இலவச வைத்தியசாலை நடாத்தியவரும் 1914-ம் ஆண்டில் ஏற்படுத்திய தென்னிந்திய ஆயுள்வேத வைத்திய சங்கக் காரியதரிசியும்,

இச்சங்கத்தின் சார்பாக நடாத்திவந்த வைத்திய கல்விச் சாலை உபாத்தியாயர்களி லொருவரும், சென்னை லோகல் செல்ப் கவர்ன்மெண்ட் 1924-பிப்ரவரி 24-ம் நாள் விடுத்த உத்திரவின்படி ஏற்படுத்திய அட்வைசரி போர்டின் உறுப்பினரு மாகிய இவர் மேற்படி கமிட்டியில் ஓர் உறுப்பினராகத் தெரிந் தெடுக்கப்பட்டார். இவருடைய சிறந்த உழைப்பின் பயனாக இந்திய மருத்துவக் கல்லூரி ஒன்று சென்னையில் நிலைநிறுத்தப் பட்டு அதன்கண் சித்த வைத்தியமும், ஆயுள் வேதமும், யூனானி வைத்தியமும், மேனாட்டு வைத்தியமும் சொல்லிக் கொடுக்கப்படு கின்றன. இவற்றுள் இவர் சித்த வைத்தியத்திற்குத் தலைமை யாசிரி யாக நியமிக்கப்பட்டார். பின் இக் கல்விச்சாலையை ஒட்டிய மருத்துச்சாலையில் வைகுவைத்தியரா (Resident Physician)யும் நியமிக்கப்பட்டு அவ்வேலைகளைத் திறம்படப் பார்த்து வருகின் றனர். நிற்க, சித்த வைத்திய பாடநூல்களை எழுதும் கமிட்டி யுடன் தாம் உழைத்ததுமன்றிக் குறித்த காலத்திற்குப் பின் கமிட்டி கலைந்த பின்னரும், இவர் தமக்குள்ள அளவுகடந்த வேலை கட்கிடையில் கிடைத்த நேரத்தில் அக்கமிட்டியாரால் எழுதப் பெற்ற மருத்து நூல்களை வகுத்தும் தொகுத்தும் விரித்தும் ஒழுங்குபடுத்தி அரசாங்கத்தாரால் அச்சிடச் செய்து வருகின் றனர். இதுகாறும் பாலவாகடம், நஞ்சு நூல் என்ற இரண்டு நூல் கள் வெளிவந்திருக்கின்றன. 27-12-1933-ல் சென்னையில் கூடிய அகில இந்திய சித்த வைத்திய மகாநாட்டில், 'சித்த வைத்திய சரபம்' என்ற பட்டமும், அப்பட்டத்திற்குரிய பாகையும் அங்கியும் இவருக்கு அளிக்கப்பட்டன.

1934-ம் ஆண்டு ஜனவரி முதல் நாளன்று இம்பீரியல் அர சாங்கத்தார் 'வைத்திய ரத்னம்' என்னும் அரிய பட்டத்தை இவர் அரும் பெரும் வேலைகளைப் பாராட்டி அளித்துளார்.

இப்பெரியாருக்கு நீடுவாழ்வும், குறைவற்ற செல்வமும் கொடுத்தருளுமாறு பொதுவாகத்தமிழர்கள் யாவரும் சிறப்பாகத் தமிழ்ச் சித்தவைத்திய உலகமும் எல்லாம்வல்ல இறைவனை எப் போதும் போற்றுங் கடப்பாடுடையார் என்று கூறுதல் மிகை யாகாது.

குறிப்பு

கார்த்திகை கடும்புயல்

வட வெள்ளாற்றிற்கும் தென் வெள்ளாற்றிற்கும் இடையிலுள்ள புனல் நாடும், அதன் வடக்கே தென்பெண்ணை ஆறு வரையிலுள்ள (மகதநாடு, பெண்ணைநாடு, சேதிநாடு, திருமுனைப்பாடிநாடு ஆகிய பகுதிகளடங்கிய) நடு நாடும் தொன்று தொட்டே இருபதாண்டுகளுக்கு ஒருமுறையும் அதற்குள்ளும் ஒவ்வொரு குருவட்டத்திலும் காற்றினாற் பெருஞ்சேதமடைவதுண்டு. ஈரான், கச்சான், சோழன்வாடை முதலிய காற்றுக்களால் கார்த்திகை பங்குனித் திங்களில் ஒரோவோரமயத்தில் இந்நாடுகளில் வெள்ளச்சேதமும் நிகழ்வதுண்டு. பண்டைக் காலத்தில் காற்றின் கொடுமையைத் தடுத்தற்கேற்றவாறு நகரங்கள் அமைக்கப்பெற்று வந்தன. புதுச்சேரி, கூடலூர், பாங்கிப்பேட்டை, திருமுல்லைவாயில், தரங்கம்பாடி, காரைக்கால் நாகூர் முதலிய இடங்களின் பழைய அமைப்புகளை நோக்குவோர்க்கு இவ்வுண்மை புலப்படும்.

கி. பி. 10 - 11 - 1681, 1853, ஏப்ரல் 1859, 6 - 11 - 1871, 12 - 11 - 1899, ஜூலை ஆகஸ்டு 1900, 1916 ஆகிய காலங்களில் புயற்காற்றினால் புனல் நாடும், நடுநாடும் பெருஞ்சேதமுற்றமைக்குக் குறிப்புகள் உள்ளன. கி. பி. 1874, 1880, 1882, 1884, 1887, 1891, 1893, 1898 ஆகிய ஆண்டுகளில் வெள்ளத்தினால் சேதம் ஏற்பட்டதும் குறிக்கப்பட்டுள்ளன. கி. பி. 1891-ம் ஆண்டின் கடைசியிலும் 1896 ஜூலை ஆகஸ்டு மாதங்களிலும் சீகாழி, மாயூரம், திருக்குடந்தை ஆகிய நகர்கள் வெள்ளக்காடா யிருந்தன.

இனி, சென்ற 15 - 12 - 1933ல் அடித்த பெருங்காற்று மழையினால் இந் நாடுகள் மீண்டும் பெருஞ்சேதமுற்றன. காற்றின் பேரிரைச்சலும் கடுவிசையும் யாவரையும் நடுநடுங்கச் செய்தன. காழியிலுள்ள பள்ளிக்கூடங்கள், வீடுகள், கோயில்கள் மிகுந்த சேதமுற்றன. மக்கள் இரவெல்லாம் உணவும் உறக்கமுமின்றித் திகைத்திருக்க வேண்டியதாயிற்று. மரங்கள்

பல்லாயிரக்கணக்காய் வீழ்த்தப்பட்டன. கால்நடைகளும் கோழி வாத்து முதலியவைகளும் இறந்துபட்டமை கணக்கில. ஏறக்குறைய நூற்றைம்பதின்மருக்கு மேற்பட்ட மக்கள் காற்றுக்கிரையாயினர். காழிஞானசம்பந்த அடிகளாரின் திருக்கோயில் கலசமும் சிதம்பரம் நடராஜப்பெருமானுர் கோயில் கலசங்களும் பெயர்த் தெறியப்பட்டன. எண்ணிறந்த ஏழைமக்கள் குந்தவும் இடமற்றுத் திண்டாடினர். காழியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும்மட்டும் நேர்ந்த சேதம் ஏறக்குறைய ரூபாய் நூறுயிரத்திற்கு மேலாகுமென்று மதிப்பிடப்படுகிறது.

— காழி. ப. அ. முத்துத்தாண்டவராயன்

குறிப்புக்கள் :

தமிழன்பர் மகாநாடு

சென்ற திங்களிதழில் நாம் எழுதியது போலவே, டிசம்பர் 23, 24-ம் நாட்களில் தமிழன்பர் மகாநாடு கூடிற்று, சிறுதூறல் தூறிற்று. நாம் குறித்த மறைமலையடிகளார், திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் முதலிய தமிழ்ப் பெரியார் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை பெருமழையாகப் பொழிய விருந்தது சிறு தூறலாகவே தூறி யொழிந்தது. இம் மகாநாட்டினல் விளைந்த பயனே, விளையக்கூடிய பயனே என்ன வென்பதை யெளிதில் அறுதியிட்டுக் கூறுதற்கில்லை. நந்தமிழ்த்தாயின்பால் ஓர் புதிய பரிவைப் பலர் உள்ளத்திலுங் கிளறி விட்டது என்பது மட்டும் உண்மை. இப்பரிவு வீண்போகாமல் உண்மைத் தமிழ் மக்கள் ஒருங்குகூடி விரைவில் ஏற்றன புரிவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

தமிழன்பர் மகாநாட்டு முதன்மையாளர் திரு. கே. வி. கிருட்டினசாமி ஐயர் அவர்கள் பல்லாவரம் பொதுநிலைக் கழக ஆசிரியர் மறைமலை யடிகளாருக்கு 22-12-33 காலை அனுப்பிய தந்தியின் மொழி பெயர்ப்பு :—

"தயைகூர்ந்து தமிழன்பர் மகாநாட்டுக்கு வரவேண்டுமெனத் தங்களைப் பரிவுடன் வேண்டுகிறேன்."

பல்லாவரம் பொதுநிலைக் கழக ஆசிரியர் மறைமலையடிகளார் திரு. கே. வி. கிருட்டினசாமி ஐயரவர்கட்கு அனுப்பிய மறுமொழியின் மொழிபெயர்ப்பு :—

“எனக்கு அனுப்பிவைத்த கடிதங்கள், அழைப்புகள், தந்தி முதலியவற்றிற்காகத் தங்களுக்கும், டாக்டர். உ. வே. சாமிநாத ஐயரவர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன். தமிழ் மொழியின் தூய்மையைப் பாதுகாத்து முன்னேற்றுங் கருத்தில்லாத எந்தத் தமிழ்க் கூட்டத்திலுங் கலந்துகொள்ள எனக்கு விருப்பமில்லை யென்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். பண்டைக்காலச் செம்மொழிகள் பலவற்றுள்ளும் தமிழொன்றே தன் தனிப்பெருமையை இற்றைநாள் வரை இழவா திருந்து வருகிறது. பிறமொழிச் சொற்களைக் கலத்தலால் தமிழ் மொழியின் தூய்மைநலங் கெடுவதோடன்றி அதன் வளர்ச்சியுரனும் தடைபடுமென்பதே என்னுடைய முடிந்த முடிபாகும். எனவே அம்முடிபுடன் ஒவ்வாததாகத் தோற்றும் உங்கள் கூட்டத்திற்கு நான் வாராமைக்குப் பொறுத்திடுக.” மறைமலை யடிகள்.

திரு. பா. வே. மாணிக்க நாயக்கரின் இரண்டாவது ஆண்டுவிழா

காலஞ்சென்ற சிவபுரம் பெருநிலக் கிழவரும், அரசாங்கக் கண்காணிப் பொறிவலாளருமான திருவாளர் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்களின் இரண்டாவது ஆண்டுவிழா சென்ற டிசம்பர்த் திங்கட் கடைநாளன்று நமது கழக அலுவற்சாலை மேடையின்மீது சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திரு. ஸி. ஆர். நமசிவாய முதலியாரவர்கள் தலைமை வகிக்க, திருவாளர் ராவ் பகதூர் ஸி. நடேச முதலியார் எம். எல். ஸி. அவர்களும், திருவாளர் க. ப. சந்தோஷம் அவர்களும் நாயக்கரின் அரும் பெரும் ஆற்றல்களைக் குறித்துப் பெருஞ்சொல் நிகழ்த்தினர். நாயக்கர் அவர்களின் ஞாபகக் குறியாக எஞ்சினீயரிங் கல்லூரியில் அவருடைய திருவுருவப்பட மொன்றை யெழுதித் திறந்து வைப்பதென்றும், அவர் ஆங்கிலத்தில் எழுதி முடித்துள்ள “கால்குலோகிராப்” (Calculograph) என்ற எஞ்சினீயரிங் நூலை அச்சிடுவதற்கான முயற்சி செய்வதென்றும், “ஓம்” என்ற மந்திர எழுத்தைக் குறித்து அவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள ஆராய்ச்சி நூலைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிடுவ

தென்றும் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் குலசை அப்பாசாமி ஓதுவா மூர்த்தி அவர்களால் ஜலதரங்கம் வாசிக்கப்பட்டது.

பாராட்டு

சென்னை இந்திய மருத்துவக் கல்லூரி ஆசிரியர் C. S. முருகேச முதலியாரவர்களுக்கு அரசாங்கத்தார் வைத்தியரத்தினம் என்ற புத்தாண்டுப்பட்ட மளித்ததை மிகவும் பாராட்டுகிறோம். இவருக்கு இப்பட்டம் காலந் தாழ்த்து வந்ததொன் றென்பதே எம் கருத்தாகும். பட்டம் பெற்ற பெரியாரின் வரலாற்றுக் குறிப்பினையும் உருவப் படத்தையும் இவ்விதழ் பிறபக்கங்களிற் காண்க.

பிரிவாற்றுமை

சைவசித்தாந்தச் சாத்திர அறிஞரும், முதன் முதலாக சிவாஞான பாடியத்தையும் தேவார அடங்கன் முறையையும் திருந்திய பதிப்புகளாக வெளியிட்டவரும், தருமபுர ஆதீன வித்வ சிரோன்மணிப் பட்டம்பெற்றவருமான உயர்திரு. சுவாமிநாத பண்டித ரவர்கள் சென்ற 6வ சனிக்கிழமை யன்று சிதம்பரத்தில் சிவபிரான் திருவடி நீழலடைந்தமை கேட்டு நாம் ஆற்றொணுத் துயரடைகின்றோம். பொதுவாகத் தமிழுலகமும் சிறப்பாகச் சைவ உலகமும் இப்பெரியாரின் மரணத்தினல் தம் ஊன்று கோல்களில் ஒன்றை யிழந்து கையற்று நிற்கின்றன வென்பதே எம் கருத்தாகும். பூவுலகு நீத்துப் புகழுல கெய்தியபெரியாரின் திருநாமம் என்றென்றும் நின்று நிலவுவதாக. இவர்தம் வாலாற்றுக் குறிப்புகள் 'செல்வி'யில் விரைவில்வெளிவரும்.

<u>புத்தக வரவு :</u>

மண்ணியல் சிறு தேர்—இது பண்டித மணி. தி. கதிரேசசெட்டியாரவர்கள் எழுதியது. இதன் மதிப்புரை அடுத்த இதழில் வெளிவரும்.



தொல்காப்பியர்.

(உஅஅ-ம் பக்கம் பார்க்க)